## நமது அதிபரவர்களுக்கு

### வடக்கன்குளம் நாடார் ஐக்ய சங்கத்தார் (கொளும்பு) சமர்ப்பித்த வரவேற்புப் பத்திரம்.

விண்ணில்மிளிருகின்ற சந்திரனே போல் நம்பதி குலத்துதித்த வித்தவ சிம்மமே! வருக!!

தண்டுகளிலினிய கரும்பினுள் ரசமோ, திக்திக்குந் தெள்ளமுதோ, மாந்தர் புகழ்க்கும் செவிவழியார் புகட்டு மூயர்கனிரசமோ, தித்திக்கும் பாவலரும் நாவலரும் எடுத்துவசகக் கிரமமொடு "நாடார்குல மித்திர"னாய் இசைத்தோய்! இஃதுதங்குலம் மேன்மையுறும் வழியாகுமென்று பல்லோர் நினைந்து வியந்து மொழியும் வண்ணம் பேரும், புகழும், பெருமையும் பெற்றோய்! வருக!!

நினதுபத்திரிகாதிபத்தியத் தொழிலுக்கேற்ப யாரும் வியக்கும் அரிய மூதறிவோய்! முன்னூல் விதிவிய முறையொடு மூற்றுமறிந்து தர்க்கம், இலக்கணம்தன்னொடிலக்கியம், ராஜீய சமுதாயங்களின் பீடத்தமர்ந்து நிற்கும் பெரியோய்! வருக!!

பாண்டி நன் வள நாட்டின் அருக நாம் திருநெல்வேலியெனும் சிறப்புறும் அருப்புக்கோட்டையில் அருமுகன் றன்திருமகனாய் அவதரித்து முத்துநாடனெனும் பெயர்வகித்து வாய்பெறு கன்னல், வழிவது செந்நெல், வளம் பலவுறம் இளங்குலைவயலும், பழம் பலபெறும் பன்மலர்ச்சோலையும் வர்ணாச்சிரம தர்மம் கை விடாது பேர் பலர் அன்புடனே சிறப்புறும் பயன் பெறுகோத்திர பண்புறுகூடும் பேரும், புகழும், பெருமையும் பெற்றோய்! வருக!!

இத்தரையில் எத்திறத்தோரும், சதமும் பத்திரிகையாம் எங்குல "மித்திரனை" பத்திரிகையால் நாடு க்ஷேமமுறும் என்ற அநுபவம் பிரமாணத்தைக் கொண்டு தோன்றச்செய்து அதின் எதிர்கால க்ஷேமங்கருதி இவண்விஜயம் செய்துள்ள தங்கள் க்ஷேமம் ஆக்கம்பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,<br>
வடக்கன்குளம்<br>
நாடார் ஐக்ய சங்கத்தார்,<br>
கொளும்பு. (1—3—27)

---

### II
### கொழும்பு நாடார் பெருமக்கள் வாசித்தளித்த வரவேற்புப்பத்திரம்.

**கண்ணியம்மிகுந்த புண்ணியா !**

தாங்கள் சுயநலம் விடுத்து குலநலம் பொது நலம் கருதி இவண் விஜயம் செய்தீர்கள் என்பதை அறிந்து குலாபிமானத்தூண்டுதலால் வரவேற்பு உபசாரம் செய்ய முற்பட்டோம். நமது சமூக சேவையை பூஷணமாகக் கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் அறிவோம். நாங்கள் செய்யும் சிறிய உபசாரத்தினை ஏற்க வேண்டிக்கொள்கின்றோம்.

**பத்திராதிப !**

தற்கால நவீன நாகரீக உலகம் பத்திரிகையின் தத்துவத்தால் ஏற்றம் பெற்றுவருவதையுணர்ந்து எம்குலம் மேம்பாடுறவெண்ணி மித்திரனை உற்பவித்தீர்கள் போலும்! நன்று! நன்று! என்று இன்றும், என்றும் உள்ளமுவந்து கூறாமலிருக்க முடியாது.

**சமரஸ ஞானவள்ளலே !**

தாங்கள் மேற்கொண்டொழுகிவரும் "மித்திரன்" பத்திராதிபத்திய ஸ்தானம்மிக்க பொறுப்புடையதென்பதை அறிவோம். பற்பல அபிப்பிராயம், ஆன்மார்த்த தத்துவத்தினுல் பற்பல மதக்கோட்பாடு, ராஜீய அபிலாஷையினுல் அமிதம், மிதம் முதலிய கொள்கையினுல் கட்டுப்பட்டிருக்கும் நமது சமூக மத்தியில் சமரஸ ஞானத்துடனும் சாந்த இதோபதேசத்துடனும் உண்மையறிந்து உழைத்துவரும் தங்கள் சீரிய கொள்கையை வியந்து பாராட்டுகின்றோம்.

**தேசாபிமானச்சிங்கமே !**

சுயாதீனத்தின் க்ஷேமமும், விடுதலையும் நமது தேச க்ஷேமத்தினையும் விடுதலையையும் பொறுத்து நிற்கின்றது என்பதை உணர்ந்து தேச கைங்கிரியத்தில் நம்மனோரைப் பயிற்றுவிக்கும் தங்கள் பேரறிவை மெச்சுகின்றோம். நமது சமூக விடுதலையை தேச விடுதலை குறித்தெழும் பிரச்னைகளில் புகுத்தி காலமறிந்துழைக்கும் தங்கள் சமூக சேவையை அறிந்து அகமகிழ்கின்றோம்.

**சர்வமத ஞானபந்தரே !**

நமது சமூக சேவையில் எக்காலத்தும், எக்காரணத்தைவிட்டும் மதப்பின்னல் ஏற்படாவண்ணம் பாதுகாத்துக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இதுவே நமது சமூக சேவையில் சர்வ மதஞானியாகிய தாங்கள் தங்கள் உயரியகலணத்திற்குத் தற்போது எடுத்துக்கொள்ளவேண்டிய விஷயம் என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

**ஐயா !**

தாங்கள் "மித்திரன்" எதிர்கால க்ஷேமங் கருதி ஆரம்பித்துவிற்கும்தர்ம கைங்கிரியத்திற்கு ஆண்டவன் ஆதரவும், நம்மவர்களின் ஒத்தாசையும் கிடைக்கும் என்பதைத் துணிவுடன் கூறுகின்றோம். ஆண்டவன் தங்களுக்கு நீடிய ஆயுளைத் தந்து தேச கைங்கிரியத்தோடொட்டிய நமது குல கைங்கரியத்தை நடாத்த அருள் புரிய அன்னவனை வேண்டுகின்றோம்.

இங்ஙனம்<br>
தங்கள் அன்பிற்குகந்த<br>
கொளும்புநாடார் பெருமக்கள்.<br>
(24-3-27)

---

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

**3-ம் பிரிவு-15-வது அத்தியாயம்.**

மகாத்மாகாந்தி இவ்வாரத்திய "யங் இந்தியா" பத்திரிகையில் தமது ஜீவிய சரித்திரத்தின் பின்கண்ட பாகத்தை வெளியிட்டிருக்கிறார்.

கடைசியாகக் காங்கிரஸ் மேடைக்குப் போய்ச் சேர்ந்தேன். பெரிய பந்தலையும், வரிசையாக அணிவகுத்து நின்ற தொண்டர்களையும், மேடை மீது உட்கார்ந்திருந்த தலைவர்களையும் கண்டு எனக்குப் பிரமிப்பு ஏற்பட்டு விட்டது. அவ்வளவு பெரியகூட்டத்தில் நான் எந்த மூலையிலிருப்பேன் என்று யோசிக்கலானேன்.

அக்கிராசனுதிபதியின் பிரசங்கம் மாத்திரம் ஒரு தனிப் புஸ்தகமாக விருந்தது. ஆகையால் அதை ஆரம்ப முதல் முடிவுவரையில் படிப்பதென்பது அசாத்தியமாகும். ஆகவே சில பாகங்கள் மாத்திரம் படிக்கப்பட்டன.

பிறகு விஷயாலோசனைக் கமிட்டிக்குத் தேர்தல் நடைபெற்றது. கோகலே என்னை கமிட்டிக்கூட்டங்களுக்கு அழைத்துச்சென்றார்.

ஸர் பிரோஸ்ஷா என்னுடைய தீர்மானத்தை அனுமதிப்பதென்று முடிவுசெய்துவிட்டார். ஆனால் விஷயாலோசனைக் கமிட்டியில் யார் அதைப் பிரேரிப்பார் என்றும், அது எப்போது பிரேரிக்கப்படுமென்றும் நான் யோசித்துக் கொண்டிருந்தேன். ஏனென்னில் ஒவ்வொரு தீர்மானத்தின் மீதும் ஆங்கிலத்தில் நீண்ட பிரசங்கம் நடந்தது. ஒவ்வொரு தீர்மானத்திற்கும் ஆதரவாக யாராவது ஒரு பிரபலத் தலைவர் இருந்தார். அந்தப் பெரிய தீரர்கள் முன்பு நான் ஒரு நொண்டிக் குதிரை போலிருந்தேன். இருட்டிவிடவே என்மனது தடிக்கவாரம்பித்தது. கடைசியில் வரும் தீர்மானங்கள் வாயுவேகமாகத் தள்ளிவிடப்படுவது வழக்கமென்று என்னுடைய ஞாபகம். ஒவ்வொருவரும் எழுந்து செல்ல அவசரப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது 11-மணியாகிவிட்டது. எழுந்து பேச எனக்குத்தைரியமில்லை. நான் முன்னதாகவே கோகலேயைக்கண்டு பேசிவிட்டேன். அவர் என்னுடைய தீர்மானத்தைப் பார்த்திருந்தார். ஆகவே நான் அவருடைய நாற்காலிக்கருகில் சென்று "தயவு செய்து எனக்கு ஏதாவது செய்யுங்களேன்" என்று ரகஸ்யமாகக் கூறினேன். "உங்களுடைய தீர்மானத்தை நான் மறந்துவிடவில்லை. அவர்கள் எவ்வளவு அவசரமாகத் தீர்மானங்களைத் தள்ளிக்கொண்டு போகிறார்களென்று பாருங்கள். ஆனால் உங்களுடைய தீர்மானத்தை விட்டுவிட நான் இடங்கொடுக்கமாட்டேன்" என்று அவர் பதில் கூறினர்.

"ஆகவே எல்லாம் முடிந்து விட்டது" என்று ஸர் பிரோஸ்ஷா மேட்டா கூறினர்.

"இல்லை இல்லை. தென் ஆப்பிரிக்காவைப்பற்றிய தீர்மானம்இன்னும் பாக்கியிருக்கிறது. ஸ்ரீமான் காந்தி அதிக நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறார்" என்று கோகலே கத்தினர்.

"தீர்மானத்தைப் பார்த்துவிட்டீர்களா ?" என்று அவர் கேட்டார்.

"ஆமா"

"அது உங்களுக்குப் பிடித்திருக்கிறதா ?

"பேஷா[illegible]கிறது"

"அப்படியானால் காந்தி அதைப் பிரேரிக்கலாம்"

நான் நடுங்கிக்கொண்டே அதைப் படித்தேன். கோகலே அதை ஆதரித்தார்.

"ஏகமனதாக நிறைவேறிவிட்டது" என்று ஒவ்வொருவரும் கத்தினர்கள்.

"காந்தி! நீங்கள் அதைப்பற்றி 5 நிமிஷநேரம் பேசலாம்" என்று ஸ்ரீமான் வாச்சா கூறினர்.

இது எனக்குப் பிடிக்கவே இல்லை. தீர்மானத்தைப்பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள ஒருவருக்கும் ஆவலில்லை. ஒவ்வொருவரும் எழுந்து போகவே ஆவலாயிருந்தனர். கோகலே அந்தத் தீர்மானத்தைப் பார்த்துவிட்டாராகையால் வேறு எவரும் அதைப் படிக்கவாவது விவரத்தைத் தெரிந்துகொள்ளவாவது அவசியமில்லையென்று கருதப்பட்டுவிட்டது.

காலையில்நான்என்ன பேசுவதென்று நினைத்துக்கொண்டிருந்தேன். 5 நிமிஷத்தில் நான் என்ன பேசுவது? நான் நன்றாகத் தயார்செய்து கொண்டிருந்தேன். ஆனால் நாவெழவில்லை. நான் எழுதிப் படிக்க வேண்டாமென்றும் தாராளமாக வாய்விட்டுப் பேசுவதென்றும் தீர்மானித்திருந்தேன். ஆனால் தென் ஆப்பிரிக்காவில் பேசுவதில் நான் பெற்றிருந்த ஆற்றல் அப்போது திடீரென்று என்னைவிட்டுப் போய்விட்டது.

என்னுடைய தீர்மானத்தைப் பிரேரிக்கவேண்டிய சமயம் வந்ததும் ஸர் வாச்சா என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டார்.

நான் எழுந்து நின்றேன். என் தலை சுழன்றது. எப்படியோ நான் தீர்மானத்தைப் படித்தேன். அன்னிய நாடுகளில் குடியேறுவதைப் புகழ்ந்து ஒரு செய்யுள் தயாரித்து யாரோ ஒருவர் அச்சிட்டு கொடுத்து வழங்கியிருந்தார். நான் அச்சப்பாட்டைப் படித்துவிட்டு தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருப்பவர்களுடைய குறைகள் சிலவற்றைத் தெரிவித்தேன். இச்சமயத்தில் ஸர் டின்ஷா மணியை அடித்தார். ஐந்து நிமிஷம் நான் பேசிவிடவில்லையென்று எனக்கு நிச்சயமாகத் தோன்றியது. இன்னும் இரண்டு நிமிஷத்திற்குள் முடித்துவிட வேண்டுமென்று எச்சரிக்கை செய்வதற்காக இந்த மணி அடிக்கப்பட்டதென்று எனக்குத் தெரியாது. மற்றவர்கள் அரை மணி, முக்கால் மணி நேரம் பேசியபோதிலும் மணியே அடிக்கப்படாமலிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். ஆகவே எனக்கு வருத்தமேற்பட்டதால் மணியடிக்கப்பட்டவுடன் நான் உட்கார்ந்துகொண்டு விட்டேன். ஆனால் அந்தச் செய்யுள் ஸர் பிரோஸ்ஷாக்குச் சரியான பதிலாகுமென்று நான் அப்போது என்னுடைய அறியாமையினுல் கருதினேன். தீர்மானத்தை நிறைவேற்றுவதென்ற பேச்சே இல்லை. அந்தக் காலத்தில் விசிட்டர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் அதிக வித்தியாசமில்லை. எல்லாரும் கையைத் தூக்கினார்கள். எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. என்னுடைய தீர்மானமும் அதே மாதிரி முடிவு பெற்றதால் அதனுடைய முக்கியத்துவமெல்லாம் போய்விட்டதாக எனக்குத் தோன்றியது. ஆயினும் காங்கிரஸில் இது நிறைவேற்றபபட்டுவிட்டதென்பது எனக்குச் சந்தோஷமுண்டுபண்ணியது. காங்கிரஸ் ஆதரித்து முத்திரை வைத்து விட்டால் தேசம் பூராவுமே ஆதரித்து விட்டதாகுமென்பது எவருக்கும் ஆனந்தமுண்டுபண்ணக் கூடியதாகும்.

---

## துண்டு துணுக்குகள்.

வேனிற்காலத்துக்குச் சூர்ய ஒளியைக்கூடிய விரைவில் குடிக்க ஏற்பாடு செய்யப்படுகிறதாம். சூர்ய ஒளி தேகத்தைப் போஷிப்பதென்றும் அவ்வொளி தேகத்தில் படுவது நல்லதென்றும் சொல்லிவந்ததுபோக, இப்போது அவ்வொளியை ஒரு கோப்பை பாலில் இருந்து எடுத்துக்குடிக்க ஏற்பாடு செய்யப்படுவதுடன் அத்தகைய பால் புட்டியில் அடைத்து விற்கவும் படுமாம்.

* *

மாரிஸில் உள்ள முத்தம் இடுதலைத் தடுக்கும் சங்கத்தார் ஒரு முறை முத்தம் இடுவதால் ஒருவர் வாயினின்றும் மற்றொருவர் வாய்க்கு நாற்பதாயிரம் நோய்க்கிருமிகள் தொத்திப் போகின்றன என்று உலகத்தவர்களுக்கு எச்சரிக்கை செய்கிறார்கள்.

* *

இந்தியச் சட்டசபையின் தலைவரான ஸ்ரீமான் பட்டேல் தமது சம்பளத்தில் தமக்கு நேரும் செலவு போக மீதத்தைப் பொது நலத்திற்காகக் கொடுத்துவருகிறார். அவர் மாதந்தோறும் இரண்டாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தி மகாத்மா காந்திக்கு அனுப்பிவருகிறார்.

* *

மைசூர் மகாராஜா சென்ற வாரத்தில் சாமுண்டி மலையிலுள்ள ஏழை ஜனங்களுக்கு 25 ராட்டினம் நன்கொடையாக அளித்திருக்கிறார். அவர்களுக்கு ஓர் ஆசிரியர் சென்று சில நாட்களாக நூல் நூற்கக் கற்பித்து வருகிறார்.

* *

திருவனந்தபுரம் பெரிய வைத்திய சாலையில் சென்றவாரத்தில் ஒரு குறத்தி ஒரே சமயத்தில் மூன்று குழந்தைகளைப் பெற்றாளாம். உடனே பண்டிலிருந்து திவான் அம்மூன்று குழந்தைகளுக்கும் மூன்று ரூபாய் படி உத்தரவு செய்திருக்கிறார்.

* *

நாசப் பூர்ப் பகுதியில் ஒரு கிராமத்தில் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த சமார் பூணூல் போட்டுக் கொண்டதால் கோபமடைந்த உயர்ந்த ஜாதியார் யாரோ அவனைக் கழனி வழியில் கொன்றுவிட்டார்களாம்.

* *

மான்செஸ்டரில் ஜேம்ஸ் கார்டன் என்ற துணி வியாபாரியும் மற்றொரு பாங்கரும் சேர்ந்து பம்பாய்க்கு விற்பனைக்காக அனுப்பவேண்டிய துணிகளுக்குப் பதில் வெறுங் கந்தைகளை ஒரு பெரிய மூட்டையாகக் கட்டி அனுப்பிவிட்டதாக லண்டனில் ஒரு வழக்கு ஏற்பட்டிருக்கிறது.

* *

இங்கிலாந்திலுள்ள ஆண்களின் ஜனத்தொகையில், 100-க்கு 26 பேர்கள் பிரம்மச்சாரிகள், 34 பேர்கள் விவாகமானவர்களாம்.

* *

பெண்கள், பொதுவாக 18-வது வயதில் தான் தங்கள் முழுத்தேகக் கட்டை அடைகின்றனராம்

* *

மனிதர்கள் நடக்கவும், எழுதவும் கூட சக்தியற்றவர்களாகிவிடும் காலம் கூடிய சீக்கிரத்தில் வந்துவிடும். அப்பொழுது நடப்பதற்கு மோட்டார் வண்டியையும் எழுதுவதற்கு "டைப்ரைட்டரையும்" உபயோகிக்க வேண்டியதாகும் என்று ஸ்ரீமான் டீன் இஞ்சு கூறுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# இலங்கையில் ஸ்ரீமான் S. A. முத்துநாடாரவர்கள்.

## க்ஷேமநிதிக்குப் பேராதரவு.

## வாலிபர்களின் தீவிர உணர்ச்சி.

## இலங்கை நாடார் மகாநாடு கூட்டத்தீர்மானம்.

## கொழும்பு நாடார் பெருமக்களின் பொதுக்கூட்டம்.

## புதிய போஷகப் பிரபுக்கள்.

(நமது விசேஷ நிருபரிடமிருந்து.)

கொழும்பு:-25-3-27.

நமது "மித்திரன்" அதிபர் ஸ்ரீமான் எஸ். ஏ. முத்துநாடாரவர்களை வரவேற்றுபசரிப்பான் வேண்டியும், "மித்திரன்" க்ஷேமநிதிக்குத் தக்க ஆதரவு செய்வான் வேண்டியும் கொழும்பு நகர நாடார் பெருமக்களால் ஓர் பொதுக் கூட்டம் 24-3-27 வியாழக்கிழமை கும்பனித்தெரு, யூனியன் பிளேஸ் 65-ம் நிர கட்டடத்தில் நடைபெற்றது.

ஸ்ரீமான்கள் கோ. மா. அமிர்தையா நாடார், பா. ஏ. சிலுவைநாடார், ம. தே. மதுரேந்திரநாடார், த. கு. மிக்கேல்நாடார், ஐ. ம. மரியமிக்கேல் நாடார் மற்றும் பல கனவான்களின் முயற்சி பாராட்டத்தக்கது. ஸ்ரீமான்கள் அ. ச. மதுரேந்திரநாடார், பி. எஸ். அந்தோணிமுத்துநாடார், எஸ். சே. சவரிமுத்துநாடார் முதலியோரால் முறையே பிரேரிக்கப்பட்டும், ஆமோதிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் ஸ்ரீமான் ஜே. எஸ். தானியேல் நாடாரவர்கள் அவைத்தலைமை வகித்தார்கள். அன்னவர்கள் இலங்கை தேசத்தில் சிறந்துவிளங்கும் "டைம்ஸ் ஆப் ஸிலோன்" என்ற ஆங்கிலத்தினப் பத்திரிகை ஆபீஸில் ஓர் பிரதம உத்தியோகஸ்தர். தயானகுணம், சாந்தம் உடையவர். ஓர் குலாபிமானியுமாவார். கூட்டத்திற்கு சுமார் 300 ஜனங்கள்வரை விஜயம் செய்திருந்தனர். மேலும் பெரியோர் பலரும் விஜயம் செய்திருந்தனர்.

ஸ்ரீமான் எஸ். எஸ். சர்க்கரைப் பாண்டியரவர்களாலும், மற்றும் பல குலாபிமான வாலிப சிலர்களாலும் பஜனை கீதம் இனிமையாய்ப் பாடப்பட்டது. கடவுள் வணக்கம் ஆனதும் ஸ்ரீமான்கள் எஸ். ஏ. முத்துநாடார், சபைத்தலைவர், ஜி. பி. வேதநாயக நாடார், எஸ். பி. எட்வர்ட்நாடார் முதலிய கனவான்களுக்கு ஸ்ரீமான் கி. மு. ம. மிக்கேல் அந்தோணிநாடார் புஷ்பமாலைகள் சூட்டினர். தலைவர் முகவுரை கூறுகையில் பத்திரிகையின் சக்தியையும், கொள்கையையும், விரிவுபடப் பேசிவிட்டு மித்திரனுக்கு அனைவரும் ஒத்தாசை புரியக் கேட்டுக்கொண்டார்கள். பின்னர் கனம் அதிபரவர்களுக்கு கொழும்பு நகர நாடார் பெருமக்கள் சார்பாக ஸ்ரீமான் கி. மு. ம. மிக்கேல் அந்தோணி நாடாரவர்கள் ஓர் வரவேற்பு உபசாரப் பத்திரம் வாசித்தளித்தார்கள். கனம் அதிபரவர்கள் உபசாரப் பத்திரத்திற்குத் தக்க விடையளித்தார்கள். அப்பால் ஸ்ரீமான்கள் ஜி. பி. வேதநாயகம் நாடார் (ஒப். யம். சி. ஏ.) எஸ். பி. எட்வர்ட் நாடார், கனம் அதிபர் ஆகிய மூவராலும் நாம் நமது சமூக ஸம்பந்தமாய் காலாகாலமறிந்து செய்யவேண்டிய கருமங்களை எடுத்துரைக்கப்பட்டதுமல்லாமல் "மித்திரன்" தற்கால நிலைபற்றியும், அதன் க்ஷேமாபிவிருத்தியைக் கோரி க்ஷேமநிதிக்குத் தக்க ஆதரவு செய்யவேண்டுமென்றும் பேசப்பட்டது.

ஸ்ரீமான்கள் ஜி. பி. வேதநாயக நாடார், எஸ். பி. எட்வர்ட்நாடார் ஆகிய குலாபிமானிகள் உபந்நியாசம் செய்யும்போது "தேர்தல் காலத்தில் நம்மைத் தேடி ஓடிவந்த நம்குலத்தோர் சிலர் இங்கு விஜயம் செய்யாமலிருப்பது மிகவும் ஆச்சரியம் என்று குறிப்பிட்டபோது "கேளுங்கள்" "கேளுங்கள்" என்ற சப்தம் பலப்பட்டிருந்தது. இந்திய க்ஷத்திரியநாடார் சங்கத்தைப் பற்றிய விஷயமும் பிரஸ்தாபிக்கப்பட்டது. இலங்கை தேசம் வாழும் இந்திய க்ஷத்திரிய நாடார் சமூகத்திற்காக நன்மையான வழியில் உழைக்க ஷை சங்கம் பலதாப் பட்டவழியில் ஈடுபட வேண்டும்; அப்படியின்றேல் அச்சங்கம் ஒன்று பெயரளவில்—எழுத்தளவில் இருப்பதில் கவனம்செலுத்த வேண்டும் என்ற உணர்ச்சி விஜயம் செய்துள்ளோர் மனத்தில் உறுத்திக் கொண்டிருந்தது என்பது வெளிப்படை.

கனம் அதிபரவர்கள் தங்களது சொற்பொழிவிடையே "மனிதன் தான் செய்யவேண்டிய கடமைகளைக் குறிப்பிட்டு மனிதர் பிறப்பதும் இறப்பதுமாயிருக்கிறார்களென்றும், இதற்கிடையில் "மனிதன்" என்ற பெயரை அவன் கொள்ளவேண்டுமென்றும், ஊர்வன, பறப்பன, நடப்பன போன்ற பிராணிகளைப்போல் ஒருமனிதன் பிறந்து இறப்பானானால் அவன் "மனிதன்" ஆகமாட்டானென்றும், தேசம், மதம், ஜாதி முதலியவற்றில் ஒன்றிற்காவது உழைத்துப்புண்ணியம்தேடிக்கொள்வதே மனிதன் கடமையென்றும் குறிப்பிட்டுவிட்டு "மித்திரன்" வேண்டுதலைக் குறிப்பிட்டு முடித்தார்கள். இடையில் எழுந்த சந்தேக வினாக்களுக்கு தக்க பதிலுமளித்தார்கள்.

அப்பால் ஸ்ரீமான் ஜி. பி. வேதநாயகநாடாரவர்கள் அடியிற்காணும் தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்கள்." இலங்கை தேசம் வாழும் இந்திய க்ஷத்திரிய நாடார்களின் எதிர்கால க்ஷேமங்கருதி, குலநலங்கருதி உழைக்க ஏற்பட்டிருக்கிற ஸ்தாபனங்களை புதுப்பிக்கவும், இன்னும் பல் வேறு ஸ்தாபனங்கள் உருவகப்படுத்தவும் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தீர்மான ரூபமாகச்செய்து கிரியாம்சையில் உழைக்க சாதகமாய் ஓர் மகாநாட்டைக்கூடிய சீக்கிரம் கூட்டுவிக்க இம்மகாநாடு தீர்மானிக்கிறது." என்பதே. பலர் ஆமோதித்தும் ஆதரித்தும் பேசினார்கள். பலத்த கரகோஷத்தினிடையேதீர்மானம்நிறைவேறியது. பிரஸ்தாப விஷயத்தில் வாலிபசிலர்களுக்குள் மிகுந்த பரபரப்பும், தீவிர உணர்ச்சியும் ஏற்பட்டது. பலர் உடனே ஓர் கமிட்டியை (உபசரணைக் கமிட்டி) கூட்டிவிடவேண்டும் என்று பேசினார்கள். ஸ்ரீமான் எஸ். ஏசுதாஸ்நாடார் எழுந்து ஸ்ரீமான் ஜி. பி. வேதநாயகநாடார் அவர்களின் பிரஸ்தாபத் தீர்மானம் போற்றத்தக்கதென்றும், வாலிபசிலர்களுக்குள் ஏற்பட்ட பரபரப்பான உணர்ச்சி மெச்சத்தகுந்ததென்றும், என்றாலும் கமிட்டி கூட்டுவதற்கு முன் மகாஜனங்கள் யாவருக்கும் மீண்டும் துண்டுப்பிரசுரம் வழங்கி ஓர் பொதுக்கூட்டம் கூட்டி ஷை உபசரணைக் கமிட்டியைக் கூட்டுவதே நலமென்றும் பேசினார்கள். கமிட்டியை உடனே கூட்டவேண்டுமென்றெழுந்த வாலிப சிலர்கள் இவ்வபிப்பிராயத்தை ஒப்புக் கொண்டார்கள்.

கனம் அதிபரவர்கள் மீண்டும் முடிவுரை கூறினார்கள். இலங்கையில் மகாநாடு கூட்டுமென்ற பிரச்சினை புகழப்படத்தக்கதென்றும், மகாநாடு கூட்டுவதென்ற பிரச்னை முற்றுப்பெறுமானால் தான் ஏற்கனவே இலங்கை வந்து மகாநாட்டின் ஊழியத்தில் பங்கெடுத்துக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்கள். இவ்விஷயத்தை கனம் அதிபர் குறிப்பிட்டபோது மகாத்மா காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிட்டு இந்தியா வந்தவுடன் கூடிய கல்கத்தா காங்கிரஸ் மகாசபையில் கலந்துழைத்து குமஸ்தா வேலைபார்த்ததும் மற்றும் பல தொண்டாற்றியதும் நினைவிற்கு வந்துவிட்டது. மேலும் அருப்புக்கோட்டையில் 28-9-27ல் கூடப்போகும் தேவாங்கர் குல மகாநாட்டிற்குத் தனக்கு அழைப்பு வந்திருப்பதை யொட்டியும், வைக்கம் வீரரும் "குடியரசு" அதிபருமாகிய ஈரோடு ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமி நாயக்கர் அவர்கள் ஷை மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க வருவதாலும் நாய்க்கரவர்கள் நாடார்களின் தோழர் என்ற காரணத்தை யிட்டும்தான் 25-3-27 வெள்ளிக்கிழமை இந்தியா திரும்புவதாகத் தெரிவித்து விடைபெற்றுக் கொண்டார்கள்.

தலைவரவர்கள் முடிவுரை கூறியதும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது. மித்திரன் க்ஷேமநிதிக்கு பலத்த ஆதரவு ஏற்பட்டதுமல்லாமல் சந்தாதாரர்களாகவும் பலர் சேர்ந்துள்ளார்கள். ஸ்ரீமான்கள் ஜே. எஸ். தானியேல் நாடார், சி. கூ. சவரிமுத்துநாடார், கோ. மா. அமிர்தையா நாடார், பி. ஞா. அ. அந்தோணி நாடார், அ. ச. மிக்கேல் நாடார் ஆகிய 5 குலாபிமானிகளும் "மித்திரன்" போஷகப்பிரபுகளாய்ச் சேர்ந்துள்ளார்கள்.

நிற்க கனம் அதிபரவர்களும் அவர்கள் தம் சகாக்களும் 21-3-27 திங்கள்கிழமை கந்தானை, ஜாயலா, நீர்கொழும்பு, மாதம்பை முதலிய இடங்களுக்குச் சென்றிருந்தனர். ஆங்காங்கு நன்கு வரவேற்கப்பட்டு மித்திரன் க்ஷேமநிதிக்குத் தக்க ஆதரவும் நம்மவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது. பல குலாபிமானிகள் சந்தாதாரானார்கள். 24-3-27ல் மித்திரன் புதிய போஷகப் பிரபுக்களான ஸ்ரீமான்கள் சி. கூ. சவரிமுத்துநாடார், பி. ஞா. அ. அந்தோணிநாடார் அ. ச. மிக்கேல்நாடார் ஆகிய மூவரும் கனம் அதிபரவர்களையும், அவர்கள் தம் சகாக்களையும் வைத்து ஓர் போட்டோ எடுத்தனர். கனம் அதிபர் அவர்கள் 25-3-27ல் இந்தியா திரும்புவதையிட்டு பல குலாபிமானிகள் வந்து உபசாரம் கூறிச் சென்றனர். புதிய போஷகப்பிரபு ஸ்ரீமான் கி. மு. இ. மிக்கேல் நாடாரவர்கள் நயம் திருப்பூர் கதர் வேஷ்டியும், சால்லையும், அனுப்பிக்கால் நன்கொடையளித்து உபசாரம் கூறினர்.

25—3—27 மாலை 6¾ மணிக்கெல்லாம் கனம் அதிபரவர்கள் கொழும்பு கோட்டை ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். பலர் வழியனுப்ப ஸ்டேஷனுக்கு உடன் சென்றனர். ஸ்ரீமான் எஸ். பி. எட்வர்ட் நாடாரவர்கள் ஏற்கனவே ஸ்டேஷனுக்கு வந்திருந்தனர். சரியாய் 7-மணி 5 நிமிஷத்திற்கெல்லாம் பிரயாணப்பட எல்லோரும் வந்தனம் செலுத்தி உபசாரம் கூறிக் கொண்டனர்.

## நமது பத்திரிகையும், அதன் நிருபர்களும்.

எத்தேசத்திலும் பல பத்திரிகைகள் தோன்றி ஒவ்வொன்றும் ஒவ்வோர் முக்கிய லக்ஷியத்துடன் நடைபெற்று வருகின்றது. சில பத்திரிகைகள் வியாபார சம்பந்தமாயும், சில வைத்திய சம்பந்தமாயும், சில கல்வி சம்பந்தமாயும், சில சட்ட ஞானம் பற்றியும், சில சிற்ப சாஸ்திரம் பற்றியும், சில வைதீக நோக்கத்துடனும், சில காங்கிரஸ் சம்பந்தமாயும், சில காங்கிரஸ் விரோதமாயும், "நாடார்குல மித்திரன்", 'வன்னிய குல மித்திரன்' 'இந்திரகுல மித்திரன்' முதலியன தனிப்பட்ட ஜாதி விர்த்திக்கேதுவான லக்ஷியங்கொண்டும் வெளி வருகின்றன.

பத்திரிகைகளின் முக்கிய லக்ஷியம் ஒன்று பற்றியிருப்பினும், பொதுவான உலக வர்த்தமானங்களையும் பிரசுரிக்க வேண்டுமென்பது பத்திரிகா ரிஜிஸ்ட்ரேஷன் விதிகளில் ஒன்றாகும். எனவே எப்பத்திரிகையும் தனது விசேஷ கொள்கையுடன் தேசிய ராஜீய விஷயங்களையும் தனது விரிவுக்கும், பரிமாணத்துக்கும் தக்க அளவு சேர்த்துப் பிரசுரிக்கவே கடமைப்பட்டிருக்கிறதென்றேற்படும்.

பத்திரிகைகளின் நிலைமை இதுவாயின் நமது "நாடார்குல மித்திரன்" பிரதம லக்ஷியம் இன்னதென்பது நமக்குத் தெரிந்தேயிருக்கிறது. நாடார் குல விர்த்தியின் பொருட்டே நம் பத்திரிகை ஸ்தாபகமாகி நாடார் குல மக்களின் விசேஷ அவசியங்களைப் போதுமான அளவு வெளியிட்டு வருகிறதென்பதை நாம் ஒப்புக்கொண்டேயிருக்கிறோம். ஆனால் அவ்விஷயங்கள் அளவுக்கு மிஞ்சிய பல நிருபங்களால் பத்திரிகையின் பூராக் கலங்களையும் கவர்ந்து கொண்டிருக்கின்றனவென்றே நம்மவர்கள் சில சமயம் குறை கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஏனென்றால் வாசகசாலையில்லாத சில கிராமங்களின் நம்மவர்கள் பெரும்பாலும் "நாடார்குல மித்திரன்" தவிர ஏனைய பத்திரிகைகள் படிப்பதற்கில்லை. இப்படிப்பட்டவர்களின் அறிவு விர்த்தியின் பொருட்டு வேறு பல விஷயங்களையும், உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முக்கியமான சில சம்பவங்களையும் பிரசுரிப்பது பிசகாகமாட்டாது. அவ்விதம் செய்வதாயின் நமது பத்திரிகாலயத்திற்கு ரூட்டர் சந்திகளாவது அந்நிய தலைநகர்களிலிருந்து வாரந்தோறும் நிருபங்களைத் தயாரித்தனுப்பும் பெரிய நூலாசிரியர்களாவது இல்லையென்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும்.

பத்திரிகாசிரியர் தமது சொந்த சிரமத்தின் பேரில் இவைகளைக் கண்டெழுத வேண்டுமென்று எதிர்பார்ப்போமானாலோ "நாடார் குல மித்திர"னின் விசேஷ லக்ஷியமாகிய நமது குலப் பிரச்னையே போதுமான அளவு அவரது ஆராய்ச்சியையும், அவகாசத்தையும் வாரந்தோறும் கவர்ந்து கொள்ளக்கூடியதாயிருக்கிறதென்பது மிகைப்படச்சொல்வதாகாது. இவ்விதமாயின் பத்திரிகாலயத்திலமர்ந்துள்ள உத்தியோகஸ்தர் பொதுவான விஷயங்களைச் சிறிதளவேனும் பிரசுரிக்காமலிருந்து வருகிறார்களா என்ற கேள்வி யேற்படுகிறது. நமக்குத் தெரிந்திருக்கிறபடி பொதுவான விஷயங்களும் ஓரளவு பிரசுரமாகிக் கொண்டுதான் வருகின்றனவென்பதை எவரும் மறுக்கமுடியாது. என்றாலும்

(இதன் தொடர்பு 6-ம் பக்கம் பார்க்க.)

## நாடார்மஹாஜன சங்கம், மதுரை.

கனவான்களே!

சிற்சில ஊர்களிலும், கிராமங்களிலும் நம்மவர்களுக்குள்ளிருந்து வரும் அற்ப சொற்பகக்ஷி பேதங்களை அறவே ஒழித்து, ஐக்கியமாக வாழ்ந்து வரவேண்டுகிறோம்.

மற்றும் சகல இதர வகுப்பினர்களுடன் சகோதரத்துவத்துடனும் ஒற்றுமையாகவும் நடந்துவரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

காரியதரிசிகள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## விடுமுறை.

நமது மித்திரன் வாசஸ்தலத்தில் நடைபெறும் உற்சவங்களில் பிரதானமானதாகிய பங்குனித்திருவிழா 29 3—27 முதல் 9-4-27-முடிய நடைபெறுவதில் சிந்திய முக்கிய திருநாட்களை யுத்தேசித்து வழக்கம்போல் நமது காரியாலயத்திற்கு ஒரு வாரம் விடுமுறையாகும். ஆதலால் 11—4—27-ல் வெளிவர வேண்டிய இதழை நிறுத்தம்செய்து அடுத்த 19—4—27-ல் வெளியிட வேண்டிய அதனடுத்த இதழ் விசேஷ அநுபந்தத்துடன் வெளிவரும்.

—

## நாடார்குலமித்திரன்

அக்ஷய ௵ பங்குனி ௴ ௨௨ ௳

## உதவி தேவை.

நமது "நாடார்குலமித்திரன்" நாடார் சமுகத்திற்கு எட்டு வருஷங்களாக எத்தகைய தொண்டாற்றி வந்திருக்கிறதென்பதை எல்லோரும் அறிந்திருக்கலாம். தற்கால உலகில் தமிழ் நாட்டில் நிலவும் பல வாரப் பத்திரிகைகள் போன்று நம் மித்திரனும் நன்கு நாட்டுக்கும் ஊழியம் செய்து வந்திருக்கிறது என்று "குடியரசு" சின் ஆசிரியர் கூறியுள்ளார். இன்னும் முடியரசரும் அவ்வாறே மொழியவுங் கூடும்.

ஆனால் இன்னும் விசேஷ அழகு பொலிந்தும், உலக சமாச்சாரங்களைத்தையும் ஒருங்கே திரட்டியும், பதினாறு பக்கங்களாய் விரிந்து மலர்ந்து, பார்ந்து ஒவ்வொரு மக்கள் காமேல் வந்துலாவக்காணவேண்டுமென்றே பல்லோர் விரும்புகின்றனர். எம்முள்ளக் கிடக்கையுமஃதே. ஈராண்டில் சந்தா ஈராயிரம், மூவாயிரத்தை நூறுனால் எங்ஙனம் விரியும்; மலரும்? ஈராயிரத்தெழுநூறு ரூபாய் நிலுவை ஏற்பட்டால் எவ்வாறு வளரும்? இதனாலன்றோ பக்கம் குறைந்தது; விஷயம் சுருங்கினது. இதெல்லா வற்றையும் நிவர்த்திக்கவும், எல்லோருள்ளும்போல் நன்றாய் நடத்தவுமே பண்டு வேண்டுமென்று பல நண்பர்கள் கூறியதுக்கேற்ப சேஷம நிதி லாட்டரி யொன்றேற்படுத்தினோம். அவை பூரண வெற்றி பெற எல்லோருடைய உதவிகளும் தேவை! தேவை!! தேவை!!! அவரவர்களுக்கு அனுப்பிவைத்திருக்கும் புத்தகங்களை பூர்த்தி செய்தனுப்பினாலே போதும்; அதுவே தக்க உதவியாகும். பிரைஸ் எடுக்கும் தினம் சித்திரை ௴ 22 உக்கு ஒரு வாரத்திற்கு முன்பே பணங்களை அனுப்பி உதவி தேவைக்கு ஊக்கமளிக்கும்படி வேண்டுகின்றோம்.

# குறிப்புகள்.

### அருப்புக்கோட்டை.

அருப்புக்கோட்டை, சொக்கலிங்கபுரம் தேவாங்கர் குல முன்னேற்ற சங்கத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா காளது பங்குனி ௴ 13 ௳ ஈரோடு "குடியரசு" ஆசிரியர் ஸ்ரீமான் வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அது காலத்து சுத்த தேசிய மணம் கமழ்ந்தது குறிப்பிடத்தக்கது. கொடி தாங்கிய தொண்டர்களின் சேவை போற்றற்குரியது. ஏராளமான ஜனங்கள் ஆதி முதல் அந்தம் வரை அமரிக்கையாயிருந்து நடவடிக்கைகளைக் கவனித்து வந்தனர். ஸ்ரீமான் நாயக்கரவர்களின் பேருரை வெகு நீண்டதாகும். அதில் மக்கள் யாபேரும் சுயமரியாதையுடன் வாழ வேண்டுமென்றும்; ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வு காட்டக் கூடாதென்றும், தமக்கு யாரிடத்தும் வீண் துவேஷம் கிடையாதென்றும், தற்போதைய பிராமணீயப் பித்து மிகவும் வெறுக்கத்தக்கதென்றும், மகாத்மா காந்தியடிகளின்கதர், தீண்டாமைவிலக்கு, கிராம நிர்மாணம் ஆகிய திட்டங்களை அவசரமாய் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுவன வென்றும் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

### சுகமே திரும்பினர்.

நமது மித்திரனின் க்ஷேமங்குறித்து இலங்கை சென்ற நமதிபரவர்கள் ஆங்குள்ள குலாபிமானிகள் பலரால் நன்கு வரவேற்கப்பட்டு பொதுக் கூட்டங்கள் கூட்டி புதிய போஷகர்களும், சந்தாதார்களும் சேர்த்து பொது ஜனங்களின் பேராதரவைப் பெற்று பங்குனி ௴ 14 ௳ இவ்விடம் சுகமே வந்து சேர்ந்தார்கள். குறிப்பிட்ட தினத்திற்குள் ஊர் திரும்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் இம்முறை அதிகமாக நாட்டுப்புறங்களுக்குச் செல்ல ஏதுவில்லாது போனதுபற்றி அவர்களது வரவை எதிர்நோக்கியிருந்த அன்பர்கள் வருத்தமடையாதிருக்கும்படி கேட்டுக் கொள்வதோடு மறுமுறை போதிய அவகாசம் கொண்டு அனைத்துக்கிராமங்களுக்கும், எஸ்டேட்களுக்கும் பிரயாணம் செய்து ஆங்காங்குள்ள அபிமானிகளையும், நமது ஜனங்களையும் கண்டு அவர்களுடன் அளவளாவியிருக்க எண்ணங்கொண்டுள்ளோம். ஆகையால் அதுவரை சாந்தியுற்று மித்திரனின் எதிர்கால க்ஷேமத்திற்குதவி செய்து தங்கள் தங்கள் மித்திரன் பாலுள்ள கடமையைச் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

### குடியரசர் விஜயம்.

"குடியரசு" அதிபர் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமிநாயக்கரவர்கள் காளது பங்குனி ௴ 16 ௳ காலை எமதழைப்பிற்கிணங்கி மித்திரன் காரியாலயத்திற்கு விஜயஞ் செய்தருளினர். அவர்களை மித்திரன் அதிபரவர்கள் அன்புடன் வரவேற்று, சங்கரலிங்க விலாஸ் பஜனாலய மாணவர்கள் பாடிய வரவேற்புக் கீதத்திடை மாலை சூட்டி கூடியிருந்த ஜனங்கள் கரகோஷம் புரிந்தனர். மித்திரன் அதிபரவர்கள் ஸ்ரீமான் நாயக்கரவர்களை வரவேற்கும் முகத்தான் உரைத்த மொழிகளுக்கு பதிலிறுக்கும் வாயிலான் பத்திராதிபர்கள் என்ற தோழர் முறையில் தான் தம்மை வரவேற்றுபசாரம்செய்ததாகத் தாம் கொள்வதாகவும், வேறு எவ்விதப் புகழுரைக்கும் தாம் பாத்திரமல்லேம் எனவும், தாமாற்றியதாகச் சொல்லப்பெறும் எதுசெயலும் தமது கடமை யெனக் கருதியே அவைகளைச் செய்திருக்கலாமேயன்றி வேறு விசேஷமாக ஒன்றும் செய்துவிடவில்லை யென்றும், தற்போதைய தமது கொள்கை (சுயமரியாதை) யை ஆதரிப்போர்களில் நாடார் சமூகத்தையும் பெரிதும் நம்பியிருப்பதாகவும், சுயமரியாதையின்றி அடிமை வாழ்க்கை நீக்கப்பெற மார்க்கமில்லை யென்றும் கூறிவிட்டு நாடார் சமூக நலங்கோரி நடத்தப் பெற்று வரும் "நாடார்குல மித்திரன்" நாடார்களுக்காகவும், நாட்டார்களுக்காகவும், வந்திருப்பதாகவும், இனியும் விசேஷ பலம் பெற்று விரிந்த நோக்கத்துடன் சிறப்பாய் நடைபெறச் சகலரும் இதை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாகவும் குறிப்பிட்டனர்.

பின் மூ. மூ. மூ. வாசகசாலைக்கு அழைத்துச் செல்லப்பெற்று ஆங்கு ஒரு வரவேற்பும் நடைபெற்றது.

### ஜீவகாருண்யச் செல்வர்.

காரைக்குடி "குமரன்" பத்திராதிபரும், காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தலைவரும் சிவநேயச் செல்வருமாகிய திருவாளர் சொ. முருகப்ப செட்டியாரவர்கள் விருதுநகர் அன்பர்களின் அழைப்பிற்கிணங்கி காளது பங்குனி ௴ 17 ௳ யன்று ஆங்கு விஜயம் செய்து பெண்களுக்காகவும் பொது ஜனங்கட்காகவும் தனித்தனியாக ஜீவகாருண்யப் பிரசங்கங்கள் இரண்டு நிகழ்த்தினார்கள். 18 ௳ இவ்விடம் மகா-ள-ள-ஸ்ரீகளான அ. கு. சி. சுப்பிரமணியம் வேல் முதலியார், வீரப்பஞ் செட்டியார் ஆகிய சைவாபிமான அன்பர்களின் வேண்டுதல்படி புளியம்பட்டியில் அருமையானதொரு பிரசங்கம் ஜீவகாருண்யத்தைப்பற்றி செய்தார்கள். அது சமயம் பிரம்மஸ்ரீ ஞானானந்தசுவாமியவர்களும் விஜயஞ் செய்து அதே பொருள்பற்றி விளக்கமாகவும் உருக்கமாகவும் பிரசங்கமாரி பொழிந்தனர். கேட்போர் உள்ளம் நெகிழ்ந்து அன்பு களிக்குருகினர்.

மறுநாட்காலை திருவாளர் முருகப்ப செட்டியாரவர்களையும் அன்னாரின் அரியதுணைவர் திருவாளர் அருணாசலம் செட்டியாரவர்களையும் அவர்களது சகாக்களையும் இவ்விடம் மூ. மூ. மூ. வாசகசாலைக்கு வரவேற்று உத்தியோகஸ்தர்கள் உபசாரம் செய்தனர். அது சமயம் ஸ்ரீமான் சு. ஆ. முத்து நாடார் அவர்கள் உருக்கமானதொரு சிற்றுரை கூறுகையில் எக்கோக்கொடு கனம் செட்டியாரவர்கள் பிரயாணம் செய்திருக்கின்றார்களோ அக்கோக்கிற்கிசைய அவர்களின் அரிய இதோபதேசங்களைத் தாராளமாக அருப்புக்கோட்டை நாடார் சமூகம் செவிமடுக்க நிலைமை ஒத்தில்லாதிருப்பதைக்குறித்து பெரிதும் வருத்தப்படுவதாக மிகவும் இரங்கிய தொனியில் கூடியிருந்த அனைவருள்ளமும் நெக்கு நெக்குருகப் பேசியதுடன், இத்தென்னாட்டிலே நாடார்சமூகமும் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகமும் பொதுவாழ்விலும், சமூக அபிவிருத்தியில் நாட்டம் கொள்ளுவதிலும் ஏறக்குறைய சரியாக ஒத்தே வேலை செய்திருக்கின்றவென்றும் இவ்விரு சமூகமும் ஒன்றுகொன்று ஒத்துழைத்து சமூகமாய்ப் பொதுவேலைகளை கவனிக்கின் நாட்டிலுள்ள ஏனைய மக்களுக்குப் பேருபகாரமாயிருக்கு மென்றும் ராஜீய தேசிய சமூக வாழ்வில் முன்னணியில் நிற்க சாதகமுண்டென்றும், இதுமுதல் இரு சமூகப்பத்திரிகைகளும் இதற்கான வேலையைச் செய்ய முனைந்து நிற்க வேணுமென்றும் பேசினார்கள். உபசாரத்திற்குப்பதில் கூறமிடத்து திருவாளர்களான செட்டியாரிருவரும் ஸ்ரீமான் முத்துநாடார் அவர்கள் கூறிய மொழிகளையேற்று அவ்விதமே இருசமூகங்களும்சிறப்புற்றிலங்குவதன் காரணமாய் நாட்டிற்குச் செய்யவேண்டிய பணியை இருசமூகங்களும் ஒத்து முன்னின் றுழைப்பின் பெரிதும் பயன் கிடைக்குமென்றும் கூறிவிட்டு ஜீவகாருண்யப்பிரசாரம் குறித்து விஜயம் செய்துள்ள இதுபோது தங்கள் அபிப்பிராயங்களைத் தெளிவாய் நாடார் பெருமக்களிடை எடுத்துரைக்க மார்க்கமில்லாது அருப்புக்கோட்டை கனம் உறவின்முறையார் தங்கள் சமூகத்தைத்தடைசெய்திருப்பது பற்றித்தாம் வருத்தமடைவதாகவும் அவ்விதத் தடையை விலக்க உண்ணாவிரதங் கொண்டு சத்தியாக்கிரகம் செய்யும் இருவீரர்களுக்கும் இரங்குவதாகவும் சொல்லினர்.

பின் மித்திரன் காரியாலயத்திற்கு அழைக்கப்பெற்றனர். உபசாரம் கூறும் பொருட்டு கனம் தி. கருப்பையா பிள்ளையவர்கள் சிறிது பேசினார்கள். பதிலுரைதரும் வாயிலான் திருவாளர் முருகப்பசெட்டியாரவர்கள், பத்திரிகை [illegible]

### கதர் அரசரின் வருகையும், நாடார் ஜனங்களின் தொண்டும்.

வழுதி குல வள்ளல்காள்! இந்நவீன உலகின் கண்ணே மாபெருந்தலைவரும், ஏழை பங்காளரும் கருணைக்கடலுமான கதர் அரசர் மகாத்மா காந்தியடிகள் நம்நாட்டுக்கு விஜயஞ்செய்வர்.

அவ்வமயம் நாம் அன்னவரை ஏற்றுத் தொழுதல் அவருக்கு விருப்பமன்று; ஆனால் அன்னவர் முனைந்துள்ள காரியத்தில் ஈடுபட்டு குடிசைத் தொழிலை ஆதரித்து அதற்கு உதவிசெய்வோமாயின் நம் கடமைகளை ஆற்றினவர்களாகின்றோம்.

சங்கத்தலைவர்காள்! சென்ற வருடம் நடத்தாமல் விட்டுவிட்ட நம் மகாநாட்டை அதிசீக்கிரத்தில் கூட்டுவித்து காந்தியடிகளைத் தலைமை வகிக்கும்படி ஏகமனதுடன் வேண்டுவோமாக. பரந்தாமன் தன் பக்தனுடைய உண்மையான பக்திக்கு ஈடுபட்டு எவ்வாறு வரவளித்தனனோ அஃதேபோல் நம் பரமாத்துமா நம் பக்திக்குள் ஈடுபடுவர் என்பது நிச்சயம். அன்னவர் தலைமை வகிக்க மறுத்துவிட்டபோதிலும் விருந்தினராக வருவது நிச்சயமே. ஏனெனில் அன்னவர் பணம் பிரிப்பதற்காகவே வருகின்றனர் என்பதை யாவரும் அறிந்த விஷயமே.

புண்ணிய சீலர்களே! புண்ணிய புருஷரின் வருகையை எதிர்பாருங்கள். அன்னவர் ஏழைகளின் பொருட்டே சுற்றுப் பிரயாணம் செய்கிறார். நாம் ஏழைகளைக் காப்பாற்றுவோமாக.

நாடார் கனவான்களே! நமது மகா ஜனசங்கம் மகாநாட்டை விரைவில் கூட்ட ஒவ்வொருவரும் பிரயாசை யெடுங்கள். காலம் நெருங்கிவிட்டது. நம் மகா ஜன சங்கத்திற்கு நற்பெயரைத் தேடுங்கள். நாம் கதர் அரசரின் பாக்கியம் பெற்றோமேயானால், ஏழைகளின் பாக்கியத்தையும் பரந்தாமனுடைய பாக்கியத்தையும் பெற்றவர்களாகின்றோ மென்பதை நிச்சயமாய் நம்புங்கள்.

பாலியர்களே! நம் பாக்கியத்தை இழந்துவிடாதேயுங்கள். நாம் ஒவ்வொருவரும் பாடுபட்டு மகாஜன சங்கமொன்று கூட்டுவித்து காந்தியடிகளைத் தலைமை வகிக்கும்படி செய்து அன்னவரின் ஆசீர்வாதம் பெற்று நாட்டுக்கும் ஏழைகளுக்கும் நம் சமுகத்திற்கும் சேவைசெய்ய முந்துங்கள்! முந்துங்கள்!! பெருமைக்காரரையும், பிடிவாதமுள்ளவரையும் புறக்கணியுங்கள். ஏழைகளுக்காகப் பாடுபடுவோமாக. இதுவே நாம் செய்ய வேண்டிய கடனென்று கூறாமல் சொல்வேன். இதுவே என் உள்ளக் கிடக்கையாம்; ஆதலால் நாம் ஏழைகளுக்காகப் பாடுபடுவோமாக.

ப. வே. ச. பழனிச்சாமி

—

மத்தையும் கஷ்டத்தையும் பொறுமையையும்அனுபோகங்கொண்டு சொல்லி, 8 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் நாடார்குல மித்திரனைப்பற்றிப் பாராட்டுவதாகவும் அதற்கு அபிமானிகள் என்றும் உறுதுணை புரிந்து ஆதரித்துவர வேண்டுமென்றும், வெளித்தோற்றத்தில் பிரமிப்பும் உள்ளுக்குள் மகா கவலையையும் கஷ்டத்தையும் தரும் இவ்வேலையை ஒவ்வொருவரும் அநுபவித்து உணரவேண்டுமென்றும் சமயம் நேர்ந்தபோழ்தெல்லாம் வேண்டும் உதவி புரியப் பின் வாங்கக்கூடாதென்றும், பத்திரிகையாலேயே உலகம் பயன் பெற வேண்டியதிருக்கிறதென்றும் சவிஸ்தாரமாய் எடுத்துரைத்தார்கள். பின் நாடார் உறவின் முறைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கட்டடத்தைப் பார்த்துவிட்டு அங்குள்ளவர்களிடம் கண்டு பேசிய பின்னர் மகா-ள-ள-ஸ்ரீ ஆ. இ. ஆ. இராமபெருமாள் நாடார் அவர்களின் அன்பின் விருப்பிற்கிணங்கி சிறிதுபானம் அருந்தி 10-மணிசுமாருக்கு மதுரைக்குப் பிரயாணமானார்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பொதுநல முயற்சி.

இப்புவியின் கண் மானிட ஜென்மமெடுத்தவரெவரேனுமொரு கருமத்தைச் செய்யத் துணிவரேயாகில், அன்னவர் அக்கருமத்தைச் செய்து முடிக்குமளவில் அதே சிந்தையும், அதே ஊக்கமு முடையவராய்:—

மெய்வருத்தம்பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்- செவ்வி
அருமையும்பாரா ரவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினார்

என்ற நீதிக்கிணங்க விடாமுயற்சியுடையவராய் தாமெண்ணிய கருமத்தை நிறைவேற்றி அதன் பலனையடைந்து குதூகலிப்பாரென்பது திண்ணம்.

இவ்வண்ணமாகவே நம் பாண்டிய குல முன்னோர்களாகிய அறிவிற் சிறந்தோர் அநேகர் பொது நன்மைகளைக் கருதியவர்களாய் அநேக இடங்களில் பொது ஸ்தாபனங்களாகிய கோவில், பாடசாலை, சத்திரம் முதலிய வற்றைக் கட்ட அநம்பிராயங்களுடன் முயற்சித்து ஏற்படுத்தி வைத்திருக்கின்றனர்— ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவ்விதப்பொது ஸ்தாபனங்கள் பின் சந்ததியாராகிய நம்மனைவோர்க்கும் பிரயோஜனப்பட்டு ஸ்தாபித்தவர்களின் நாமங்கள் புகழப்படுவதுடன் நம்குல நீங்கலால் புதிது புதிதாக சிறப்பிக்கப்பட்டு தேசத்தாரனைவருக்கும் பிரகாசித்து ஜொலிக்கின்றன.

இவ்விதப் பொதுஸ்தாபனங்களை ஸ்தாபித்து நிலைநாட்டுவதே நம் பாண்டியகுல வீரர்களின் கடமையாகும்.

அட்டதிக்கும் ஆழியால் சூழப்பட்டு அருணனைப்போல் ஜொலிக்கின்ற இலங்கை மாநகரின் கண் தம்மல ஞுரியென்னு பேர் கிராமத்தில் தற்சமயம் நடைபெற்றுள்ள பொது ஸ்தாபன விஷயமாயுள்ள சரிதையொன்றை ஈண்டு எடுத்துரைக்கலாயினேனும். மேற்கூறிய கிராமமானது அநேக வனங்களால் சூழப்பெற்றதும் அந்நிய பாஷைக்காரர்களால் குடியேறப்பெற்றதுமானதோர் கிராமம். பல்லாண்டுகளுக்கு முன்னமே நம் இந்தியப்பாண்டிய குலத்தவர்களும், மற்ற மனேக சகோதரர்களும் இக்கிராமத்திலும் சுற்றுப்புறங்களிலுமாக வசித்து வந்திருக்கின்றனர். எனினும் தெய்வத்தைத்தொழுது கொள்வதற்கேதுவானதோர் கோவிலாவது, பாடசாலையாவது அல்லதோர் சத்திரமாவது இருந்ததில்லை. இதைக் கண்ணுற்ற ஆங்கிலேய மகான்களும், ஏனைய உத்தியோகஸ்தர்களும் இவ்விடத்திலோர் தேவாலயத்தை ஸ்தாபித்து நிலைநாட்ட பலவருடங்களாக முயற்சித்து வந்தனர். இதற்கனுகூலமாக "கோவிலில்லா வூரில் குடியிருக்கவேண்டாம்" என்ற பாட்டின் கருத்தும் நம் மூதாதைகளினுள்ளத்திலும் பாண்டியகுல பால்ய வீரருள்ளத்திலும் உதித்ததாலும், தீவிர முயற்சியாலும் நம்குல தீரர்களான பலருதவியினாலும் சகோதரர்களின் அரும் பிரயாசங்களினாலும் "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்றபடி தற்சமயத்தில் சேற்றதான ஓர் ஆலயம்கட்டப்பட்டு தெய்வத்தை வழிபடுவதற்கேதுவான பாக்கியமடைந்திருக்கின்றனர். அன்பான எம்குல மித்திரர்காள்! இவ்வித பாக்கியமுமடைய ஏனையபாகங்களிலுள்ள அபிமானிகள் முயற்சிப்பது நலமாகும். அவ்விடங்களிலுள்ள சகோதரர்களுக்கும் இவ்வித வாஞ்சையிருக்கவேண்டும். இஃதன்றி நம் திருநெல்வேலி நாட்டில்நீர்ப்பாய்ச்சலற்ற எவ்வளவு பிரதேசங்களிருக்கின்றன! அவைகளும் நீர்பாய்ச்சப்பட்டு தேசம் செழிப்புறவேண்டாமா! நம் "மித்திரன்" எவ்வளவு குறைவான பக்கங்களையுடைத்தாயிருக்கின்றான்! அவனும் அநேக இலைகளுடைத்தாக விர்த்தியாக வேண்டாமா? இவ்வித காரியங்களில் சித்திபெற வேண்டுமாகில் நாம் செய்யவேண்டியது யாதெனில், நாம் எக்காரியங்கள் செய்தினும் ஒன்றுபட்டு முயற்சிப்போமேயாகில் பயனடையாமற் போவதில்லை.

ஆகையால் பாண்டியகுல கனதனவான்களாகிய வீரசிங்கங்காள்! நமது பொது ஸ்தாபன விஷயங்களில் [illegible]

## ஸ்ரீமான் மா. வே. ஷண்முகவேல் நாடார் வாசகசாலை, தூத்துக்குடி.

இவ்வாசகசாலையின் ஆதரவில் 27-3-27-ல் ஓர் தர்க்க சங்கம் ஸ்ரீமான் அ. ச. நடராஜ நாடார் அவர்கள் அக்கிராசனாதிபத்யத்தின் கீழ் நடைபெற்றது.

அவ்வமயம் ஸ்ரீமான் வே. தி. அய்யம்பெருமாள் நாடார் அவர்கள், "புலால் மறுத்தல்" என்னும் பொருள்பற்றி உபந்நியாசித்தார். பின்னர் ஸ்ரீமான் மா. அய்ய நாடார் அவர்கள், புலால் உணவு மனிதருக்கு அவசியமான உணவு இல்லை என்றும், மரக்கறிதான் மனிதருக்கு நல் உணவு என்றும், மனிதனுடைய தேக ஆரோக்கியத்திற்கும், நல்வழிப்படுத்துவதற்கும் அவசியமான உணவு மரக்கறிதானென்றும், கோவில்களில், கிடாய் வெட்டும் வழக்கம் ஒழியவேண்டுமென்றும், உயிர்கள் மேல் அன்புள்ள தெய்வத்தை, அறியாமையினால் பழி சுமத்திவரும் ஒரு கொடிய வழக்கம் ஒழித்து, மக்களுக்கு நல்ல நினைவைக் கொடுக்கவேண்டுமென்றும்பேசினார்கள். மற்றும் பலர் இதை விஷயமாய் ஆதரித்தும் ஆக்ஷேபித்தும் பேசினார்கள். அக்கிராசனர் முடிவுரைக்குப் பின் கூட்டம் இனிது கலைந்தது.

## ஓர் வேண்டுகோள்.

### திருநெல்வேலி ஜில்லாபோர்டுக்கு.

திருச்செந்தூர் தாலுகாவின் தென்பாகத்திலுள்ள பல புராதன கிராமங்கள் மணல் வெளிகளால் சூழப்பட்டிருப்பதினாலும் ரோடு வசதியாவது இதர போக்கு வரவு சாதனங்களாவது இல்லாதபடியாலும் இப்பகுதி பொது ஜனங்களுக்கு தென்பகுதி போக்குவரத்தில் மிகுந்த கஷ்டமாயிருக்கிறது.

நெடுகிலும் பெரிய மணல்மலை வெளிகளாய் இருப்பதினால் இப்பகுதியில் சரல் ரோடு போடுவதாயினும் லக்ஷக்கணக்காய் பணம் செலவாகுமென்று இந்த ரோடு வேலை காலதாமதம் ஆரம்பிக்கப்படாமலிருக்கிறது.

குரும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேல்புறம் சந்திப்புப் பாதையிலிருந்து தெற்கே காயம், செங்குழி, பூச்சிக்காடு, சுப்பிரமணியபுரம், காயாமொழி, பரமன்குறிச்சி, தண்டுபத்து உடன்குடி மார்க்கமாய் குலசேகரபட்டணம் வரை ஏற்கனவே ஒரு மணல்பாதை போய்க்கொண்டிருக்கிறது.

குரும்பூர் ரயில்வே ஸ்டேசனுக்கு மேல்புறம் ஷை சந்திப்புப்பாதையிலிருந்து ஆரம்பித்து ஷை பப்ளிக் மார்க்கமாய் மேற்காட்டிய ஊர்களின் வழியாய் லைட்ரெயில்வே போடுவதாயின் போர்டாருக்கு அதிகச் செலவில்லாமல் ஏராளமான வருமானம் கிடைக்கக்கூடியதாயிருப்பதுடன் பொது ஜனங்களுக்கும் மிகுந்த சௌகரிய மேற்படும்.

ஆகையால் சமூகத்தில் கிருபை கூர்ந்து ஷை பாதையில் லைட்ரெயில்வே போடும் வேலையைத் துரிதமாய் ஆரம்பித்து நடத்தும்படி உத்தரவாகப் பிரார்த்திக்கிறோம்.

குறிப்பு:—மேற்கண்ட விதமாக மகஜர்கள் எழுதி மகஜரில்கண்ட ஊரார்கள் திருநெல்வேலிஜில்லா போர்டு மகா-ள-ள-ஸ்ரீ பிரசிடெண்டவர்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். பிரசிடெண்ட் மகா-ள-ள-ஸ்ரீ குமாரசாமிரெட்டியாரவர்கள் தங்களின் கிருபா நோக்கத்தோடு தென்னாட்டினரை திருப்திசெய்வார் என்ற பூரண நம்பிக்கையிலிருக்கிறோம்.

திருச்செந்தூர் தாலுகாவின் மணற்பாங்கான தென்பாகத்தில் ஓர் லைட்ரெயில்வே (டிராம்வேயும்) போடுவதான உத்தேசம் ஜில்லாபோர்டின் ஆலோசனையிலிருப்பதாகச் சென்ற வருஷத்திய அட்மினிஸ்டிரேஷன் ரிப்போர்ட் மூலமறிகிறோம்.

இது சமயம் ஜில்லாபோர்டு மெம்பர்களான மகா-ள-ள-ஸ்ரீ எஸ். எஸ். ஆதித்தநாடார், மகா-ள-ள-ஸ்ரீ சுப்பிரமணியநாடார், மகா-ள-ள-ஸ்ரீ சாது சபைபதிப்பிள்ளை முதலியவர்கள் முயற்சி எடுக்கும்படியாக வேண்டிக்கொள்கிறோம்.

அ. ப. ஆதித்தர்,
காயாமொழி.

குலாபிமானிகளே! பத்திரிகாபிமானிகளே!!

உலகஞானத்தை யூட்டி ஜன சமூக க்ஷேமத்தை நாட்டும்

நமது மித்திரனின் லாட்டரிச் சீட்டில்

விசேஷமாய்ச்சீட்டெழுதுங்கள்.

விசேஷலாபம்பெறலாம்!

5-புஸ்தகம் விற்றல் ரூ 20 கம்ஷன்

கிடைக்கும்.

இன்றே எழுதுங்கள்!

இன்றே எழுதுங்கள்!!

## முக்கூடல்.

தேசியத் திறவுகோல்களுள் மூன்றாகிய கல்விப் பகுதியின் சார்பாய் முக்கூடல் நகரில் ஸ்தாபித்திருக்கின்ற க்ஷத்திரிய வித்தியாபிவிருத்தி சங்கத்தார் முக்கூடல் நகர் சரஸ்வதி க்ஷத்திரிய வித்தியாசாலை மேற்பார்வை கர்த்தர்களாக 27—3—27-ல் கூடி கீழ்கண்டவர்களை அதிக வாக்குகளின் மூலம் தெரிந்தெடுத்திருக்கிறார்கள்: ஸ்ரீமான் கு. வே. பசுங்கிளி நாடாரவர்கள் பிரசிடெண்டாகவும், ஸ்ரீமான் பூ. ரா. மகாலிங்க நாடாரவர்கள் வைஸ்பிரசிடெண்டாகவும், சேர்மாதேவி தாலுகா போர்டு மெம்பர் ஸ்ரீமான் இ. பி. குமரவேல் நாடாரவர்களும் எம். கே. தியாகராஜ் நாடாரவர்களும், காரியதரிசிகளாகவும் ஷை வித்தியாசாலையின் நிர்வாகக் கமிட்டியாரின் ஏகமன ஆமோதிப்புடன் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஸ்ரீமான் இ. பி. குமரவேல் நாடாரவர்கள் நிர்வாகக் கமிட்டியாரின் வேண்டுகோட்படி மானேஜர், அண்டு கரஸ்பாண்டெண்டு ஸ்தானம் வகிக்க மனம் இசைந்துள்ளார்.

ஷை சங்க முயற்சிகளும் வித்தியாசாலையின் அபிவிருத்தியும் நம் தாய் நாட்டில் கொண்டாடப்படும்படி நன்னிலை யெய்த ஈசன் அருள் புரிவாராக வென்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

முயல ஈசன் அருளுமாறு இறைவனையனுதினமும் இறைஞ்சுவோமாக.

ஞா. பா. ஏ. ஏகதாசநாடார்,
தம்மலஞுரிய.

## இலங்கை வர்த்தமானங்கள்.

(மனோகரன் எழுதுகிறார்.)

### "மித்திரன்" க்ஷேமநிதி.

ஸ்ரீமான் என். எ. முத்துநாடாரவர்கள் 25—3—27ல் சுதேசம் திரும்பினார்கள். அவர்கள் நம்மவர்கள் மத்தியில் விட்டுப்போகும் "மித்திரன்" க்ஷேமநிதி விஷயமாய் அபிமானிகள் பலரும் உற்சாகமாய் வேலை செய்து வருகிறார்கள். நண்பர் எஸ். கே. தாஸ் நாடாரும் வெகு தீவிரமாய் ஒவ்வொரு வனையும் சந்தித்துப் பேசிவருகிறார். இலங்கையில் "மித்திரன்" க்ஷேமநிதி வெற்றிபெறும் என்பதற் கையமில்லை: சுதேசத்தில் நம்மவர்கள் அனைவரும் தீவிரப்பிரசாரம் செய்து "மித்திரன்" தர்ம கைங்கர்யத்தில் ஈடுபட வேண்டுவது கடமையாகும்.

### இலங்கை, நாடார் மகாநாடு.

சென்ற 24—3—27ல் கூடிய மீட்டிங்கில் தீர்மானம் செய்தபடி மகாநாடு கூட்டும் விஷயமாய் அபிமானிகள் பலர் சிரத்தைகொண்டிருக்கிறார்கள். "இலங்கை இந்திய க்ஷத்திரிய நாடார் சங்க" நிர்வாகிகளைக் கலந்து கொள்ளவேண்டிய முயற்சியும் செய்யப்படுவதாகத் தெரிகிறது. மகாநாடு கூட்ட ஆண்டவன் அருள்புரிவாராக.

### சுதேசம் திரும்புகிறார்.

இலங்கை கிறிஸ்தவ வாலிப சங்க ஊழியரும, குலாபிமானியும், நாங்குநேரித்தாலுகா வடக்கன்குளம் வாசியுமான ஸ்ரீமான் ஞா. பா. வேதநாயக நாடாரவர்கள் 1-4-27-ல் சுதேசம் திரும்புகிறார். 24-4-26- ஞாயிற்றுக்கிழமை மீண்டும் இலங்கை விஜயம் செய்வார்கள். ஆண்டவன் சுகமே பாதுகாப்பாராக. 1-4-27ல் அன்னவரை வழியனுப்ப அபிமானிகள் பலர் துறைமுகம் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரங்கூனில்நெருப்பு

### தாலுதெருக்கள் நாசமாயின. 10 லட்ச ரூபாய்க்கு மேல் நஷ்டம்

(ஸ்ரீமான் எஸ். எஸ். துரை நாடார் எழுதுகிறார்)

இரங்கூன் மார்ச் 24உ

நடந்த 22-ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 11-80 மணிக்குஇரங்கூனைச் சேர்ந்த அலோனில் ஒரு பெரிய நெருப்பு உண்டாயது. (ஓர் சீனாக்காரியின் சமையலறையிலிருந்து நெருப்பு உண்டானதென்று சொல்லுகிறார்கள். சிலர் ஓர் காப்பிக்கடையிலிருந்து உண்டானதென்றும் சொல்லுகிறார்கள்) அதின் காற்றானது பலமாய் வீசிக்கொண்டிருந்தபடியால் தெருவில் நெருப்பு பரவ ஏதுவாயிருந்தது. ஆகவே சில மணி நேரங்களுக்குள் ரோஸ் பேங், ஸ்டீவர்ட், கீழ் கிமந்தான், சுதர்லாண்டு என்ற நாலு தெருக்களிலும் நெருப்பு பரவலாயின.

இரங்கூன் நெருப்பணைப்போர் தங்களின் யந்திரங்களினால் எவ்வளவோ பிரயாசப்பட்டு தண்ணீர் அடித்தும் நெருப்பு நிற்கவில்லை. தவிரவும், அந்தப்பக்கத்தில் அந்நேரத்தில் தெருக்குழாய்களில் தண்ணீரில்லை. இதுவும் ஜனங்களின் விதியே.

ஆகவே நெருப்பைத் தடுக்கமுடியாமலிருக்கும் பொழுது, பட்டாளமும் போலீஸாரும் அவ்விடம் வந்து ஜனங்களைக் காப்பாற்றி, கூட்டத்தைப் பந்தோபஸ்து செய்து திருடு இல்லாமல் காவல் காத்தனர்.

சாயங்காலம் 7 30மணிவரை நெருப்பு எரிந்தது. நாலு தெருக்களும் சுமார் 450 வீடுகளும் தீக்கிரையாயின. சுமார் 10 லட்ச ரூபாய் நஷ்டமெனச் சொல்லுகின்றனர். 5000 ஜனங்களுக்கு மேல் வீடில்லாமல் தவிக்கின்றனர். தெய்வம் அவர்களை ஆதரிப்பாராக.

இரங்கூனில் அநேக வருஷகாலமாய் இப்படிப்பட்ட நெருப்பு உண்டானதில்லையாம்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(3-ம் பக்கத்தின் தொடர்பு.)

பத்திரிகாலயத்திலிருப்பவருக்கு இது விஷயமாய்த் திருப்தியளிப்பதாகவே ஒரளவு இடையூறு இருப்பதாகவே நினைக்கக் காரணமேற்பட்டிருக்கிறது. அது பற்றியே இவ்வியாசம் எழுதத் துணிந்தோம். ஏனென்றால் சில வாரங்களுக்கு முன் பலர் பல நீண்டதும், பிரயோஜன மற்றதும், பிரயோஜன முள்ளதுமான வியாசங்களை எழுதி விட்டு தத்தம் வியாசங்கள் பிரசுரமாக வில்லை யென்று விசனமடைவதாகப் பத்திரிகாசிரியர் குறிப்பொன்று வெளிவரக் கண்டோம். எழுதப்பட்ட நிருபங்களைப் பிரசுரிக்கவே இடமில்லாத நிலைமையில் வேறு விஷயங்களைப் பிரசுரத்துக்காகத் தேட வேண்டிய கவலை ஆசிரியருக்காவது, அவரது சகாக்களுக்காவது இல்லா தொழியுமென்று நாம் சொல்லத் தேவையில்லை. பத்திரிகைகளுக்கு நிருபங்களை எழுத முன் வருபவர்கள் விசேஷ அபிமானிகளும், அறிவுடையோருமே யாவர் என்பதைப் பற்றி நாம் சிறிதும் சந்தேகிப்பதற்கில்லை. ஆயினும் எழுதப்படும் விஷயங்கள் நமது பத்திரிகையின் லக்ஷியத்திற்கும், பரிமாணத்திற்கும் பொருத்தமானதா, அல்லது அவ்விஷயங்களுக்கென்றேற்பட்ட வேறு பத்திரிகைகளில் வெளிவரக்கூடிய தம்சங்களாகியதா என்பதைக் கவனிக்க வேண்டும், திருஷ்டாந்தமாக நம்மை க்ஷத்திரியர்களென்று மற்றவர்கள் அங்கீகரிக்க வேண்டுமென்பது நமது பத்திரிகையின் முக்கிய லக்ஷியங்களில் ஒன்றாகும். மித மிஞ்சின வைதீக ஞானத் திலீடுபட்டே நமது தேயம் தனது ராணுவ பலத்தை இழந்து விட்டதென்றும், அதைத் திரும்ப அடைய நாம் முயற்சிக்க வேண்டுமென்றும், பிரசாரம் நடைபெறுவதுடன் பாடசாலைகளிலும் ராணுவப் பயிற்சியைக் கட்டாயப் பாடமாகப் போதிக்க வேண்டுமென்றும் சட்ட சபைகளில் முயற்சி நடந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலைமையில் ஓர் உயிரையும் கொல்லாமை என்னும் அழகிய சைவ சித்தாந்தத்தை க்ஷத்திரியமயமாய் விளங்க வேண்டிய நம் பத்திரிகையில் பல பத்தியில் எழுதி விடுவது நம் பத்திரிகையின் கொள்கைக்குப் பொருத்தந்தானோ வென்பது எனக்குச் சந்தேகமாகவேயிருக்கிறது. இரண்டாவதாக பிராமணர், பிராமணரல்லாதார் ஆகிய இரு இயக்கத்திலும் நமது பத்திரிகை எக்கக்ஷியைச் சேர்ந்ததென்பது தெளிவாயிருத்தல் வேண்டும். இவ்விஷயமாய்த் தனிப்பட்ட ஹோதாவில் பல பத்திரிகைகள் ஏற்பட்டு ஒன்றையொன்று எதிர்த்துப் போராடி வருகின்றன. இவ்வித நிலைமையில் நம்முடைய பத்திரிகை இது விஷயத்தில் வீண் சிரமதிற்காளாகா திருக்கும்படி நிருபர்கள் இது விஷயத்தில் ஸ்ரீமான் நக்கீரரவர்கள் யோசனைப்படி நடுநிலைமை வகிப்பதும் நமது பத்திரிகையின் சிக்கனத்திற்குஓர் பெரிய உதவியாம். மூன்றாவதாக நாம் எழுதும் எவ்விஷயத்தையும் நாடாரல்லாத இதர ஜாதியாரும் படிப்பார்களென்ற ஞாபகத்துடனே எழுத வேண்டும். அது மாத்திரமல்ல; நாடாரல்லாத இதர ஜாதியாரும் நமது பத்திரிகையை சிறந்த ஓர் வாரசந்தாப் பத்திரிகையாக அங்கீகரித்து அதனை வாஞ்சையுடன் வாசிக்கவும், நாளாவிர்த்தியில் நமது பத்திரிகையின் சந்தாதார்களுமாகக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தையும் கொண்டிருத்தல் வேண்டும். இவ்வித நோக்கம் பற்றிய நிருபங்களும், நிருபர்களுமே எப்பத்திரிகைக்கும் அவசியமாகுமென்று நாம் நினைப்போம்.

ஓர் பத்திரிகாபிமானி.

---


உங்கள் இஷ்டம்போல்

**மித்திரன்,**

லாட்டரிச் சீட்டெழுதி

குறிப்பிட்ட 1000, 2000, 3000 ரூ பிரைஸ் கிடைக்க

**முந்துங்கள்.**


---

# தெய்வ கோபம் கூடாது.

# பலியிடுங்கள்.

ஜீவகாருண்யத்தில் பிரதானமான உயிர் வதையை நிறுத்த வேண்டுமென்ற பிரசாரம் செய்பவர்களின் கொள்கையை ஒப்புக் கொள்ளாத ஒருவர் கேட்ட கேள்விகளுக்கு அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசார சபைப் பிரதிநிதி ஒருவர் சொன்ன பதில்.

கேள்வி:- மாமிச பக்ஷணம் மனிதனுக்கு அவசியமல்லவா?

பதில்:— மாமிச பக்ஷணிகளான சிங்கம், புலி, நாய், பூனை முதலிய மிருகங்களுக்குப் போல கோரப் பல்லும், இன்னும் மற்ற அவயவங்களும் அதைத் தின்னாத யானை, குதிரை, மாடு, ஆடு முதலிய மிருகங்களுக்கு இல்லை. எனவே சரீர அமைப்பே ஆகாரத்திற்குத்தக்கபடி இயற்கையில் அமைந்திருக்கிறது.

2. கேள்வி:—மாமிச பக்ஷணம் சரீரத்திற்கு பலம் கொடுக்குமல்லவா?

பதில்:—மனிதனுக்கு அமைந்திருக்கும் பல் குடல் மற்றுமுள்ள அவயவங்களுக்கு பழம், கிழங்கு, தானியவித்துக்கள் தான் ஏற்ற உணவு அவைகளில் மாமிசத்திற்கும் மேலான சத்துக்களிருக்கின்றன. முன்னோர்கள் அதைச் சாப்பிட்டுத்தான் நோயற்று வாழ்ந்தார்கள்.

3. கேள்வி:-மேனாட்டார் மாமிச பக்ஷணத்தால் தானே திடசரீரம் பெற்றிருக்கிறார்கள்?

பதில்:—அது தவறு. மாமிசம் தின்னாதமேனாட்டாருக்கும்அதிகதிட சரீரம் படைத்த ஹிந்து வீரர்கள் இப்போதும் வட இந்தியாவில் உண்டு. கலியுக பீமன் ராமமூர்த்தி அவர்களைச் சேர்ந்தவரே. பழம், கிழங்கு, காய்கறி தானிய வித்துகளை விட விசேஷ சத்து மாமிசத்தில் இல்லை யென்றும், மாமிசத்திற்குச் சொந்தமான மிருகங்களுக்குள்ள வியாதி அதைத் தின்னும் மனிதர்களைப் பலமாய்ப் பீடிக்கிறதென்றும், மேனாட்டு வைத்திய நிபுணர்களும், உடல் கூறு சாஸ்திரிகளும் இப்போது ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

4. கேள்வி:-நம் நாட்டிற்கு மாமிச பக்ஷணம் ஏற்றதல்லவா?

பதில்:—குளிர்ந்த நாட்டில் எப்போதும் மாமிசம் உண்ணும் வெள்ளையர்களே அதை நிறுத்தி மரக்கறி உணவு சாப்பிட ஆரம்பித்து குணமறிந்து அதற்கு சங்கமும் ஏற்படுத்தி தீவிரப்பிரசாரம் செய்து வருகிறார்கள். இயற்கைப் பரம்பரை வழக்கத்தில் நமக்கு ஏற்றதல்ல.

5. கேள்வி:—நாடார்களுக்குமாமிச பக்ஷணம் உரியதல்லவா?

பதில்:—வெள்ளையர்களே அது கூடாதென்று பிரசாரம் செய்யும் போது தென்னாட்டில் சைவ சமயத்தை நிலை நாட்டின பாண்டிய மன்னர்களின் பரம்பரையான நாடார்கள் ஜீவகாருண்யப் பிரசாரத்தை நடத்த வேண்டியது க்ஷத்திரிய தர்மம். சூரியன், காற்று, மழை முதலியவைகள்மற்றவர்களுக்குப்போல்த்தான் நாடார்களுக்கும் பிரயோஜனப்படுவது போல புண்ணிய பாவத்திற்கும் ஜாதிப் பேச்சுக்கும் இடமில்லை.

6. கேள்வி:—நாம் இதுவரை மாமிசம் புசித்து விட்டு இனிமேல் நிறுத்தினால் லாபமா?

பதில்:—சிறுவயதில் நிர்வாணமாகவும், மலங்களைத் தொட்டும், கொண்டுமிருந்து, விபரம் தெரிந்த உடன் நிறுத்திக் கொள்வது யாருக்கும் அனுபவம். அது போல பெரியோர்கள் சாஸ்திரங்கள் மூலமாக மாமிச பக்ஷணம் சரீரத்திற்குக் கெடுதல், பாவமென்று தெரிந்த உடனே நிறுத்திக் கொள்வதே நியாயம்.

7. கேள்வி:—கடவுள் ஆடு, கோழிகளை மனிதனுக்காகவே படைக்கவில்லையா? அப்படியானால் நாய், நரி, பூனை, கழுதை முதலிய மிருகங்களை யாருக்காகப் படைத்தார்?

பதில்:—நமக்கு, சரீரத்தால் உழுதும், மலத்தால் உரம் தந்தும், அசுத்தங்களை மேய்ந்து ஒத்தாசை செய்கிறதும் நம்மை எதிர்க்கச்சக்தியில்லாததுமான பிராணிகளை மனிதன் கொன்று தின்னும்படி கடவுள் படைத்திருக்கிறாரென்றால், மனிதன் வீரத்தையும், அறிவையும், கடவுளின் பக்ஷபாதமில்லாத படைப்பையும் அவமதிப்பதாகும்.

8. கேள்வி:—ஆடு, கோழிகளைக் கொல்லாமல் விட்டால் பூமி பாரம் தாங்காமல் போகாதா?

பதில்:—அப்படியானால் சுமார் முப்பது வருஷத்தில் மனிதனுடைய ஜனக் கணக்குப்படி அரைப்பங்கு ஜாஸ்தி ஏற்பட்டிருக்கிறது. இவர்களால் பூமி பாரம் தாங்காது போகாதா? இல்லையானால் ஆடு, கோழிகளுக்கும் அப்படித்தான்.

9. கேள்வி:—காய் கறிகளை அறுக்கலாமா?

பதில்:—மனிதனைக் கொல்வது பாவமென்று ஒப்புக்கொள்ளும் சிலர் சகலத்திலும் தங்களை ஒத்து பகுத்தறிவு நீங்கலாக ஐந்தறிவுள்ள மிருகங்களைக் கொல்லுவது பாவமில்லை யென்று வாதம். புரிவதோடு காய் கறிகளை அறுப்பது பாவமென்று சொல்லுகிறார்கள் என்னே ஜீவகாருண்யம்! முதலில் அ, ஆ, படித்துத்தான் இராமயாணம் படிக்க முடியும். அதுபோல முதலாவது 5, 4, 3, 2 அறிவுள்ள பிராணிகளைக் கொல்வதைப் படிப் படியாய் விட்டு விட்டால் கடைசியில் காய் கறி அறுப்பதும், பாவமாகத் தோன்றும் போது அதையும் விட்டு ஜலம், காற்று இவைகளை உட்கொண்டு மோக்ஷமடையப் பிரயத்தனம் செய்வதே மனுஷ தர்மமென்று ரிஷிகள் சொல்லியிருக்கிறார்கள்.

10. கேள்வி:—மோக்ஷத்திற்கும், இதற்கும் சம்பந்தமில்லையே?

பதில்:—நாம் ஹிந்து என்று சொல்லிக் கொண்டால் ஹிந்து சாஸ்திரங்களை நம்பி அதன்படி நடக்கத்தான் வேண்டும். அதன்படி தான் கோயில், குளம், தானம், தருமம் நடைபெறுகின்றன. புல்லாய், பூண்டாய், பறவையாய், மிருகமாய்ப் பிறந்து, புண்ணியவசத்தால் கடைசியில் மோக்ஷமடைவதற்கு சாதனமாகத்தான் இந்த கர்ம பூமியில் மானிட ஜென்மம் கிடைக்கிறதென்று சாஸ்திரங்களும், பெரியோர்களும் சொல்லுகிறார்கள்.

11. கேள்வி:—கோவில், குளம், வித்தியதானம், தருமம் செய்ய வேண்டியது அவசியமே. அதுவும் நாடார்கள் பொதுவில் நடத்தப்படுகிறதே; மற்ற விஷயமெல்லாம் அவரவர்கள் இஷ்டமல்லவா?

பதில்:—மனிதன் குளிக்கவும், அறிவு விருத்தி பண்ணவும், சுவாமி தெரிசனத்திற்கும், இடம் செய்து கொடுப்பதே விசேஷமானால் ஜீவகாருண்யம் (உயிர் வதை செய்யாமை) அதற்கெல்லாம் மேலானதென்று நான் சொல்ல வேண்டியதேயில்லை. அவரவர்களிஷ்டம் என்றால் தாங்கள் சொல்லுகிற நல்ல காரியங்களுக்கெல்லாம் எல்லோரும் பணம் கொடுக்க அவசியம் ஏற்படாது. அப்படியானால் எப்படிக் காரியம் நடைபெறும்?

12. கேள்வி:—தெய்வ கோபத்திற்கு ஆளாவதா?

பதில்:—அது கூடாது தான். தெய்வத்திற்கு பக்தி பிரதானமே தவிர பலி யல்ல. இரண்டும் சேர்ந்தால் விசேஷமே. பலி யென்பது ஆடு, கோழிகளைக் கொல்வதல்ல. தன்னிடத்திலுள்ள சகலத்தையும் கடவுளுக்குக் கொடுப்பதுதான்.

13. கேள்வி:—அது எப்படி?

பதில்:—புண்ணிய சரித்திரங்கள், புராணங்கள், இதிகாசங்கள் வாசித்து அதன்படி நடக்கவேண்டும்.

"தந்த தென்றனை சங்கரா கொள்
[ளென்றனை
[illegible] வெவ்வாம்
தின்ன தென்றனை நின்னிடத்தே
[ தந்தேன்."

என்றார் தாயுமானசுவாமிகள். அதுவே சாஸ்திரங்களின் முடிவும்.

14. கேள்வி:—தெய்வத்திற்கு ஆடு, கோழி பலி இடுவது வழக்கமல்லவா?

பதில்:—வழக்கமென்றால், முன்னோர்கள் அனுஷ்டானம் அப்படியானால் அவர்களைப்பற்றிய புராணங்களைப் பார்ப்போம். பிள்ளைக் கறி சமைத்துத் தரும்படி கேட்ட சிவனடியாருக்கும் பக்தி மிகுதியால் தன் பிள்ளையைப் பலி கொடுத்தான் சிறுத்தொண்டன். வாயில் போட்டால் விழுங்கிவிடும் ருசியுள்ள மாமிசத் துண்டுகளைத் தான் தின்னாமல் பக்தி மிகுதியால் திருக்காளத்தியப் பனுக்குப் படைத்த வேடகுல கண்ணப்பன் பக்திக்கு இரங்கி அன்பனை இன்னும் சோதிக்கக் கருதி தம் கண்ணில் ரத்தம் ஒழுக வைத்தார். கடவுளுக்குக் கண் கெட்டுப்போனதென்று நினைத்து, அதை எடுத்துவிட்டு அந்த இடத்தில் தன் கண்ணை வைத்தான் கண்ணப்பன். விபூதியின் மகிமைக்காக, ஏனாதிநாதன் தன் உயிரைக் கொடுத்தான். இதுபோல்த் தான் ஹிந்துக்கள் தெய்வ கோபத்திற்காளாகாமல், தங்களையும், தங்களிடத் துள்ளதையும் பலி கொடுத்து தெய்வத்தின் மகிமையை வெளிக்காட்டுவது வழக்கம். அதுபோல் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கும், நம்மையும், நம்மிடத்துள்ளதையும் கொடுப்பது தான் பலி. பக்தர்களின் கடமையும் அதுவே. அதுதான் தெய்வத்தின் பெருமையையும், பக்தி விசேஷத்தையும் யாருக்கும் தெரியும்படி செய்யும்.

15. கேள்வி:-பக்தர்கள் தெய்வத்திற்குப் பயப்பட வேண்டாமா?

பதில்:—ஆடு, கோழி வெட்டி ஒரு சாமானும் கீழே விடாமல் தங்கள் வயிற்றில் நிரப்பிக் கொண்டு தெய்வத்தின் பெயரைச் சொல்வது பக்தியாகாது; பயப்படுவதுமாகாது.

16. கேள்வி: இவைகளைப் பிரசாரம் செய்பவர்களுக்கு என்ன யோக்கியதை வேண்டும்?

பதில்:—உலகத்தில் யாருக்கும் எல்லா யோக்யதையும் அமைந்ததில்லை. குற்றமில்லாதவன் தெய்வத்தையன்றி மக்களில் யாருமில்லை. ஒரு வைத்தியர் நல்ல மருந்து கொடுக்கிறாரா என்று பார்க்கிறோமே தவிர அவர் யோக்யதையை பூர்வோத்திரங்களை கவனிப்பதில்லை. நல்ல மருந்தில்லாவிட்டால் ஜனங்கள் தாங்களே நின்று விடுவார்கள். இதற்கு எந்த யோக்கியதையும் தேவையில்லை.

17. கேள்வி:-தாங்கள் சொன்னபடி தங்கள் குடும்பத்தில் எல்லோரும் நடப்பதில்லையாமே?

பதில்:—வாஸ்தவம். தங்கள் குடும்பத்திலும் என் கக்ஷிக்கு ஒரு ஆள் இருப்பதாகக் கேள்வி; எனவே இது குடும்ப விஷயமல்ல; மனித சமூகத்திற்குப்பொது. குடும்பத்திலும் எல்லாக் காரியத்திலும் ஒருவர் சொல்வதை யாரும் ஒப்புக்கொள்ள வேண்டுமென்பது அனுபவத்தில் ஒத்ததில்லை. நியாயத்திற்கு மாத்திரம் கட்டுப்பட வேண்டும்.

இதுவரை தாங்கள் சொல்லிய விஷயங்களை அறிந்ததிலிருந்து இன்று முதல் மாமிசம் சாப்பிடுவதில்லை யென்றும், முன்னமே நிறுத்தியிருப்பவர்களை முன்போல் கண்டியாமல், மற்றவர்களையும் திருப்ப முயலுவதோடு, தங்களோடு பிரசாரம் செய்வதற்கும் முன் வருகிறேன். ரொம்ப சந்தோஷம்; இதுவும் வல்ல கடவுளின் கருணையே; ஷை நண்பரைப்போல் எல்லோரையும் திருத்தி வாயில்லாப் பிராணிகளுக்கு அபயம் கொடுக்கும்படி கடவுளை பிரார்த்திக்கிறேன்; ஜெய முண்டு பயமில்லை. ஓம் தத் ஸத்.

ஜீவகாருண்யப் பிரசார சபை.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## புதிய ஸ்டாக்!

### விலை வெகு சகாயம்!!

### உடனே ஆர்டர் செய்யுங்கள்.

| | ரூ. அ. |
|---|---|
| **பாக்கட் வாச்.** | |
| ரெயில்வே டைம்கீப்பர் | 3—0 |
| ரெயில்வே ரெகுலேட்டர் | 3—8 |
| ராஸ்கோப் விஸ்டம | 3—8 |
| நிக்கல் லீவர் 10 ஜீயூல்ஸ் | 8—8 |
| ஷை 7 ஜீயூலஸ | 6—8 |
| 8 days நிக்கில | 9—8 |
| **ரிஸ்ட்வாச்.** | |
| நிக்கில் வின்டர் | 5—8 |
| வெள்ளி ஷை | 6—8 |
| ரோல்ட்கோல்ட் | 6—4 |
| நிக்கில் லீவர்லில்க் பட்டையுடன் | 12—8 |
| வெள்ளி ஷை | 15—8 |
| ரோல்ட் கோல்ட் | 15—0 |
| 18 காரட் கோல்ட் | 25—0 |
| B. டைம்பீஸ் | 2—0 |
| பிராட்வெஸ்ட் | 3—12 |
| Westend co's. B. டைம்பீஸ் | 4—12 |
| அன்சோனியா B. டைம்பீஸ் | 5—0 |
| ஷை அலாரம் ,, | 4—8 |
| பிக்பென் அலாரம் ,, | 9—8 |
| பேபிபென் ,, | 10—0 |
| R. G. ரிஸ்ட்செயின் | 3—8 |
| R. G. பக்கல் Silkstrap | 2—8 |
| R. G. பாக்கெட் செயின் | 6—8 |
| **பவுண்டன் பேனுக்கள்.** | |
| வாட்டர் மென் | 7—0 |
| ஸ்வான் | 5—8 |
| ஹார்ட்வேர் | 2—8 |
| பிளாகபர்டு | 3—0 |
| ஓ ம்லக்கர் | 5—8 |
| எலக்டிரிக் பாக்கட் லாம்ப் | 1—4 |
| ஷை பெரிய லென்ஸ் | 1—8 |
| ஹாண்ட்லாம்ப் பெரிய லென்ஸ் | 1—8 |
| டார்ச் லாம்ப் பெரிய லென்ஸ் | 8—0 |


## தாய்மார்கள் கவனிக்க வேண்டியது.

சில தாய்மார்களுக்கு பலவித காரணங்களால் பால் சுருங்கி சிசுக்கள் தவிப்பதை நிவர்த்தி செய்து பால் வளரும்படி செய்ய நம்மால் ஒரு தேன் காப் ஜெபித்து வி. பி. செய்யப்பட்டு வருகிறது. 20 வருடத்து அனுபவம்; எம்மதஸ்தரும் வாங்கலாம். அனுப்பிக்கும் விதம் தேன்காயுடன் அனுப்பி வைக்கப்படும். இதன் விலை தபாற் செலவின்றி ரூ 1—4—0 மாத்திரம்.

குறிப்பு:— காத்துக்கருப்பு விஷயதிற்கும், தேக சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கும், மந்திரத்தாலும் மருந்தாலும் சிகிச்சை செய்யப்படும்.

விலாசம்:—

எ. எஸ். எ. மாந்தரீக டாக்டர்,
இனாம்தார் வீடு,
சின்னக்கடைத்தெரு, தெப்பக்குளம்,
திருச்சி.

## உடனே தேவை.

தமிழ்ஜில்லாக்களிலும் கொழும்பு, பினாங்கு, சிங்கப்பூர் பர்மா, இரங்கூன்முதலிய வெளிதேசங்களிலும் நமக்கு ஏஜெண்டுகள் தேவை. ஜெயமில்லாவிடில் பணம் வாபீஸ் என்ற கண்டிஷன் பேரில் நாம் விற்பனை செய்கிறோம். மற்ற விவரங்களுக்கு ஒரு அணா ஸ்டாம்பு வைத்து எழுதவும்:—

ஆர். சேஷன், எடிட்டர்,
ஸ்ரீரங்கம், (திருச்சி.)


சென்னை, க. க. சங்கரலிங்க நாடார் எழுதிய சிறந்த செந்தமிழ் நாவல்

பார்க்கப் புதுமை! படிப்பதற் கினிமை!!

பவளப்பதுமை என்னும்

## மலையாளத்து மர்மம்.

நாவலிற் சிறந்த நாகரீக நாவல்
நாட்டிற் குகந்த நவீனக நாவல்
அற்புதக் கற்பித அதிசய நாவல்
சித்திரப் படங்கொண்ட செந்தமிழ் நாவல்
மானிடர்க்கேற்ற மனோகர நாவல்
புத்திபோதிக்கும் புதிய நாவல்

250 பக்கம். நான்கு சித்திரப்படங்கள்.
புத்தகம் 1-க்குவிலை ரூ 1—4—0. உடனே எழுதுங்கள்.

விலாசம்:— மானேஜர்,
ரஞ்சித மனோகரா புஸ்தகசாலை,
53. செட்டித்தெரு கொளும்பு.

வீரமும், விநோதமும், விகடமும், அற்புதமும் நிறைந்த
படிக்கப் படிக்க விருப்பந் தரும் நாவல்.



## அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றிருக்கிறோம்.

# ஜோதிடம்.

ஒரு வருஷபலன்! ரூபாய் ஒன்றுதான்.

உங்களுடைய எதிர்காலபலனை அறிந்துகொள்ள விரும்புகின்றீர்களா? அப்படியானால்உங்களுடையஜெனனநட்சத்திரம்அல்லது பெயரை எழுதி அனுப்பினால் தற்சமயம் நடக்கும் 12 மாத பலன்கள் அதாவது:—உத்தியோகம், வியாபாரம், புத்திர சந்தானம், யோகம், விவாகப் பொருத்தம் முதலிய புலாபலன்களை எழுதி அனுப்பப்படும்.

சிற்றின்ப சாஸ்திரம் என்னும் புத்தகம் 1-க்கு விலை அணா 8. எமது விலாசம்:—

"ஜோதிடசாலை"
(நா) என்னூர் போஸ்டு, செங்கல்பட்டு ஜில்லா.


## தேவை.

நமது நாடார்மகாஜன சங்கத்திற்கு 3 பிரசாரகர்கள் தேவை. பிரசங்கம் செய்வதில் திறமையுள்ளவராய் இருக்கவேண்டும். ஆங்கிலப் பயிற்சியுமிருந்தால் மிகவும் நல்லது. விபரத்திற்கு காரியதரிசிகள், "நாடார்மகாஜன சங்கம்", 221, கீழமாரட் வீதி, மதுரை என்ற விலாசத்திற் கெழுதவும்.


# அவைஎங்கேகிடைக்கும்?

அருப்புக்கோட்டை "நாடார்குல மித்திரன்" பத்திராதிபர் ஸ்ரீமான் ரு. ஆ. முத்துநாடாரவர்கள் இயற்றிய

தென்னாட்டுப்புலி
ஜம்புலிங்கம் ஜீவிய சரித்திரம். (1)

ஐரோப்பா யுத்தத்தில் அரும்பாடுபட்ட
அவஸரியா நாடார் ஜீவிய சரித்திரம்.
(சித்திரப் படங்களுடன் கூடியது.) (2)

திருமலையப்பபுரம் ஸ்ரீமான் பா. பி. இரத்தினபாண்டியர் இயற்றிய
சௌந்தரநாந்தி நாவல். (3)

சென்னை நாட்டாசிரியர் ஸ்ரீமான் ச. சு. சங்கரலிங்க நாடாரவர்கள் இயற்றிய
நாடார் மகாஜன சங்க வாழ்த்துக்கீர்த்தனை. (4)

ஆகியவைகள் கீழ்க்கண்ட விலாசத்தில் கிடைக்கும். வாங்கிப்பயன் பெறுங்கள்.

"இரத்தின விலாஸ்",
28 நெ. 1-வது குறுக்குத்தெரு,
கொளும்பு.



# B. Abdul Karim Sahib,

## Kareemiya Unani Medical Store,

## Cuddalore, O. T., (South India)

அருமை துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத்திடத்தையும் அதிஅற்புத ஆச்சரியமான இன்பசுகசக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்து சொல்லலாம். ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும், தங்க மெடலும் பரிசுபெற்ற

ஜவாஹீர் முபற்ரு என்னும்

## மதன மோஹன ஹர்க்குநவி கிருத லேகியம்.

அசல் பாகம்! அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது. இந்தப் பாகம் சரியாக வேறு எந்த கம்பெனியார்களும் செய்து காட்டும்பட்சத்தில் அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூ 500 இனாம் கொடுக்கப்படும்.

அன்பின் மிக்குள கண்ப சிகாமணிகளே!

அருமையும், அனுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய வல்லமை சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ரு" வேதியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் மணவாழ்க்கையிலே தாம் என்றும் கண்டிராத சித்தானந்த செம்பீர சிற்சுகவின்ப நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோஹத்திய "காமசஞ்சீவினி" இதுதானோ! என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆணாய்ப்பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே பின்னர் மோகசக்னியிற் பட்டுக்கெட்டும், இன்னும் பலவிசக் காரணங்களினாலும் தேஹத்திற்குச் சதசாரணமாகிய நாதவிந்தை வீண் விரயஞ்செய்தும், கல்ல வாலிபப் பருவத்தில் வீரிய விர்த்தி குறைந்து உலகின்பசக்தியை இழந்து ஆண் தன்மையற்ற வயோதிகர் போல் மயங்கி நிற்கும் புருஷர்களும், வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும் எலும்புருக்கி வெட்டைச் சூட்டினாலும் ஜீவரத்தின பீடமாகிய சுக்கிலம் ஜலம்போல் நீர்த்து தரிதஸ்கலிதமுடையோரும், சித்திரபங்கமென்னும் சொர்ப்பனஸ்கலிதத்தால்காளும்வாதனைப்பட்டுக்கொண்டிருப்பவர்களும்சுரம், பிரமேகம், விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் குறைந்து நாதம் இளகி சர்வ நரம்புகளும் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, வியாபக சக்தி குறைவு, கைகாலசதி, தேக காங்கை, இடுப்புவலி, பசி மந்தம், மலச் சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மனோதத்வ புத்தி சாதுர்யத்தைக் கொண்டு வேலை செய்யக்கூடிய லாயர்கள், குமஸ்தாக்கள், பாடகர்களும் மற்றும் வியாபக சக்தியால் வேலையையுடைய எந்தத் தொழிலாளர்களுமே இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும். சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும் வியாபகவிர்த்தி புதியமேனியையும் இரத்த விர்த்தி, வீரிய விர்த்தி, சந்தான விர்த்திமுதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். சீக்கிரஸ்கலிதமுடையவர்களுக்கு இது ஓர் இணையில்லாத பரம சஞ்சீவியேயாகும்; குணஞ் செய்வதில் இது மஹாவல்லமையும், பேரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரீக்ஷிக்கும் ஒவ்வொரு கணபர்களுக்கும் தப்பாமல் குணஞ் செய்யும் சத்தியமான சித்தானந்தயோக பாகம் இதுதான் என்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்குணங்களும் ஒரே வேளையில் தெரியும். கண்டாலே தெரியும் காக்ஷி! தின்றாலே தெரியும் திடன்!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்றும் சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபாய் 100 இனாம் கொடுக்கப்படும். தன்னை பலப்படுத்திக்கொள்ள நாடும் போகவான்கள் கட்டாயம் ஓர் முறை பரீக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும். ஆர்டர் செய்யும் கனவான்கள் இந்த பேப்பரின் பெயரைக் குறித்து எழுதவும்.

40-நாள் மருந்து 16-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 10—0—0
20-நாள் மருந்து 8-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 5—0—0
10-நாள் மருந்து 4-பலம் டப்பி 1-க்கு விலை ரூ 3—0—0

பாக்கிங் & V. P. செலவு பிரத்தியேகம்.

B. அப்துல் கரீம் சாயபு,
கரீமியா யூனானி மெடிகல் ஸ்டோர்,
கூடலூர், O. T.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection